விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 12 வியாழக்கிழமை (28.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# தமிழர்களை அடக்க முயன்றால் தாக்கம் பெரிதாக இருக்கும்!

## வடக்கு முதலமைச்சர் எச்சரிக்கை



**(யாழ்ப்பாணம்)**

**தமிழர்களுடைய உணர்ச்சிகளை இராணுவத்தின் மூலமாகவும், பலாத்காரம் மூலமாகவும் நிறுத்த முயற்சித்தால் அதனுடைய தாக்கம் எதிர்காலத்தில் மிகப் பெரியதாக வரும் என்பதை அரசாங்கம் மனதில் எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சா சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

**(19ஆம் பக்கம் பார்க்க)**

## யாழில் பெருமளவு இராணுவம் குவிப்பு ஆங்காங்கே மாவீரர் தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவத்தினர் அதிகளவில் குவிக்கப்பட்டிருந்த போதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் யாழ்ப்பாணத்திலும். முல்லைத்தீவிலும் நேறறு அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களினால் மாவீரர்கள் நினைவு கூரப்பட்டிருந்த அதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டத் தொகுதியின் ஒரு பகுதியில் சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக்கட்டத்தில் ஏற்றப்பட்ட சுடரின் வெளிச்சத்தை நேற்று இரவு 6.30 மணியிலிருந்து 7 மணிவரைக்காணக் கூடியதாக இருந்தது.

சுடர்ஏற்றப்பட்டதாக தகவல்அறிந்து அப்பகுதிக்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டதையடுத்து வைத்தியசாலை வீதியல்தொழில்நிமித்தம்அங்கு கூடிநிறை ஆட்டோ சாரதிகள்தமது ஆட்டோக்களில் தலைதெறிக்க ஓட்டம் பிடித்த தமையையும்அவதானிக்க முடிந்தது.

மாவீரர் நினைவாக மரம் நடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் அறிவிக்கப்பட்ட தன்படி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா ஆகியோரின

19-ம் பக்கம் பார்க்க

## ஆயிரம் ரூபாய் கள்ள நோட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆயிரம் ரூபாய் நாணயத்தாளில் கள்ள நோட்டு புழக்கத்தில் இருப்பதாக வங்கி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உருவப்படம்பொறிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் தாளிலேயே கள்ள நோட்டு புழக்கத்தில் இருப்பதாகவும்.

இத்தாளில் சிங்கத்தின் சின்னம் இடம்பெற்றிருக்க வில்லை என்றும் கூறப்படுகின்றது.

எனவே இது தொடர்பில் பொது மக்கள் விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந)

## நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரின் தலையிலிருந்து துப்பாக்கி ரவை மீட்பு

### மருத்துவப் பரிசோதனையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மா்மமான முறையில்உயிரிழந்து கிடந்த யாழ்.நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷியன் (றஜீவ்) துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் சின்னையா சிவரூபன் தெரிவிததார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் தலைவரான றெக்ஷியனின் சடலம் நேற்று முன்தினம் அவரது வீட்டிலிருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தது.

இவரது சடலத்தை மீட்ட பொலிஸார் புங்கு

20-ம் பக்கம் பார்க்க

## பல்வேறு நாடுகளில் மாவீரர் தினம் அனுஷ்டிப்பு



(லண்டன்)

மாவீரர் தின நிகழ்வுகள உலகின் பல்வேறு நாடுகளில் நேற்று கொண்டாடப்பட்டது.

லண்டன்

இலங்கைப் போரில் உயிரிழந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை நினைவு கூர்வதற்கான மாவீரர் தின நிகழ்வுகள்

02-ம் பக்கம் பார்க்க

## வடக்கில் பார்த்த காட்சிகள் இன்னும் மனதில் நிழலாடுகிறது

### பிரிட்டன் பிரதமர் விபரிப்பு

(கொழுப்பு)

வட மாகாணத்துக்கு சென்று அங்கு நான் பார்த்த காட்சிகள் இன்னும் என் மனதில் நிழலாடுகிறது என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது, அடுத்த மாதத்துக்குள் சர்வதேச விசாரணை தொடங்கப்படா விட்டால். நாங்கள் ஐ.நா. மூலமாக அதகைய விசாரணையை கோருவோம் என்று தெளிவாக கூறிவிட்டேன்.



நான் இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு சென்று திரும்பி ஒரு வாரம் ஆகிவிட்டது. ஆனாலும, அங்கு பார்த்த காட்சிகள் இன்னும் என் மனதில் நிழலாடுகின்றன. முதலில். தமிழர்கள் படுகொலை குறித்து நம்பகமான. ஒளிவுமறைவற்ற, சுதந

20-ம் பக்கம் பார்க்க

## மாவீரர் தினத்தை அனுஷ்டித்தால் வடக்குத் தமிழர்கள் புலிகளே!

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும் என நினைத்தால் மாவீரர் தினத்தினை மறந்து விட வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

மாவீரர் தினத்தினை அனுஷ்டித்தால் வடக்கின் தமிழர்களையும் புலிகள் என்றே கருத வேண்டிவரும். மாவீரர் தினம் என்ற ஒன்று இருந்ததை மறப்பதே தமிழர்களுக்கு நல்லது.

அரசாங்கம் முட்டாள்தனமாக செயற்படக்கூடாது. பயங்கரவாதம் மீண்டும் உருவாகாத வகையில் அரசாங்கம்

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விடுதலைப்புலிகள் அமைப்பில் குறைபாடுகள் காணப்பட்டன

## முன்னிலை சோஷலிச கட்சி தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போராளிகள் இடையில் மிக்பெரிய போராளி என ஊடகவியலாளரும் முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினருமான திலக் கோதாகொட தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள ஏனைய தமிழ் அரசியல் அமைப்புகளை விட விடுதலைப் புலிகள் அமைப்பே அறிவுசார்ந்த மற்றும் தொழிலாளர் இடையில் சிறந்த சேர்க்கையை ஏற்படுத்தியது.

சிங்கள சிந்தனை மற்றும் தமிழ் சிந்தனை இடையில் இருக்கும் ஒரே வேறுபாடு இலங்கை சமூக யதார்த்த நிலையுடன் இருக்கும் விரோதமாகும்.

இந்த விரோதவாதத்திலேயே விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்கும் அதன் கட்டமைப்பும் இருந்தது. அதுவே அந்த அமைப்புக்கு வழங்கிய தீர்வாக இருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் அறிவு சார்ந்தவர்களும், போராளிகளும் இணையானவர்கள். ஒருவருக்கு ஒருவர் உயர்ந்தவரோ தாழ்ந்தவரே? அந்த அமைப்பில் கிடையாது.

எங்களுடைய கருத்துப்படி விடுதலைப் புலிகள் அமைப்பு உயர்ந்த அறிவுசார்ந்த ஒரு அமைப்பாகும். விடுதலைப் போராட்ட அமைப்பாக ஆரம்பத்தில் அந்த அமைப்பில் சில குறைப்பாடுகள் இருந்தன.

முஸ்லிம் மக்களை வெளியேற்றியது. சாதாரண மக்களை கொலை செய்தது போன்றவை அந்த அமைப்பில் ஆரம்பத்தில் இருந்தன.

இதனை நாங்கள் அவர்களிடம் காணப்பட்ட மனித நாகரிகம் தொடர்பான பிரச்சினையாகவே பார்க்கின்றோம்.

விடுதலைப்புலிகள் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் அமைப்பாக உருவாகிய போதும் இறுதிப் போராட்ட சந்தர்ப்பம் வரும் போதும் அவர்களுக்குள் முதிர்ந்த விதமான பரிணாம வளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

அந்த பரிணாம வளர்ச்சியுடன் உலக பரிணாம வளர்ச்சியை அந்த அமைப்பு பெற்றது. விமான தாக்குதல், தற்கொலை தாக்குதல்களை நடத்தும் போதும் அந்த பரிணாம வளர்ச்சியுடன் சாதாரண மக்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட்டது.

அது அவர்களின் தந்திரோபாயமான நடவடிக்கை அல்ல. அது அவர்களின் செயற்பாடுகளுடன் பின்னப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பு என்பது 30 வருடகாலமாக ஒரு நிலப்பரப்பை ஆட்சி செய்த அமைப்பு. இறுதியில் உலகில் பலம் பொருந்திய நாடுகளின் உச்சளவான உதவியுடன் சிங்கள அதிகார வர்க்கத்தின் மிலேச்சத்தனமான பலத்துடன் அடிப்பணியாது போராடிய மன உறுதிகொண்ட அமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்பு என்றார். (எ-11)

# சங்கரராமன் கொலை வழக்கு; காஞ்சி ஜெயேந்திரர் விடுதலை


(புதுச்சேரி)

சங்கரராமனை கொலை செய்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட காஞ்சி சங்கராச்சாரியார் உட்பட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கொலை செய்வதற்கான கூட்டு சதியில் ஈடுபட்டனர் என்பதை அரச தரப்பு ஆதாரத்துடன் நிரூபிக்காததால் குற்றம்சாட்டப்பட்ட சங்கராச்சாரியார்கள் உட்பட அனைவரும் விடுதலை செய்யப்படுவதாக புதுச்சேரி அமர்வு நீதிமன்ற நீதிபதி முருகன் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளதாக தமிழக செய்திகள் தெரிவித்தன.

இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய காஞ்சி சங்கரராமன் கொலை வழக்கில் நேற்று புதுவை நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.



9 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கில் மொத்தம் 25 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவர்களில் ரவி சுப்பிரமணியம் அப்ரூவர் ஆகிவிட்டார். குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான கதிரவன் படுகொலை செய்யப்பட்டார்.

இதையொட்டி 23 பேர் மீதான வழக்கில் நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிபதி முருகன் தமது தீர்ப்பில்,


சங்கராச்சாரியார்கள் உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கூட்டுச் சதியில் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரம் நிரூபிக்கப்படவில்லை. அத்துடன் சங்கரராமன் குடும்பத்தினரே கொலையாளிகளை அடையாளம் காட்டவும் தவறி பிறழ் சாட்சியாகி விட்டனர்.

மேலும் அரசு முன்வைத்த சாட்சிகளில் 83 பேர் அரசுத் தரப்புக்கு ஒத்துழைப்பு தராமல் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டனர். இந்த கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளைக் கூட அரசு தரப்பு அடையாளம் காட்டவில்லை. இதனாலே அனைவரும் விடுதலை செய்யப்படுவதாக நீதிபதி முருகன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கின் முடிவு தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்குப் பெரும் பின்னடைவாக அமையும் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-11)

# 30 வருடங்கள் வேண்டுமானாலும் மக்களுக்காக சிறை செல்லத் தயார்

## சரத் பொன்சேகா உறுதி



மக்களுக்காக மேலும் 20 முதல் 30 வருடங்கள் வேண்டுமானாலும் சிறை வாசம் அனுபவிக்க தயாராக இருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தொடன்கொட துடாகல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் பொழுதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகள், பேச்சுரிமை, கருத்து கூறும் உரிமை ஆகிய உரிமைகள் மக்களுக்கு இல்லாமல் போயுள்ளன.

இந்த நிலைமையில் இருந்து மக்களை மீட்கும் நோக்கத்தில் நாங்கள் எமது அரசியல் சக்தியை கட்டியெழுப்பினோம். இதற்காக நாங்கள் பெரும் அர்ப்பணிப்புகளை செய்துள்ளோம். பிரதான அரசியல் தலைவர்கள் என்று தம்மை கூறிக் கொள்பவர்கள் நாட்டுக்காக எதனையும் செய்யவில்லை.

பிரதான அரசியல் தலைவர்கள் என்றுக் கூறிக்கொள்ளும் தலைவர்களின் கட்சிகளுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டால் நாமும் மக்களை ஏமாற்ற நேரிடும்.

மக்களுக்கு பொய்களை கூறும் ஏமாற்றும் அரசியல் எங்களுக்கு தெரியாது. இதன் காரணமாகவே நாங்கள் புதிய கட்சி, புதிய சின்னத்துடன் எமது அரசியல் பயணத்தை ஆரம்பித்தோம். எந்த தடைகள் வந்தாலும் நாங்கள் எங்களது இந்த பயணத்தை நிறுத்த போவதில்லை.

மேலும் 20 முதல 30 வருடங்கள் வரை கூட நான் சிறைவாசம் அனுபவிக்க தயா ராகவே இருக்கின்றேன். எனக்கு எதிராக பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தினர்.

எனது பிள்ளைகளையும் பழிவாங்கினர். எனது மூத்த மகளின் கணவரை நான்கு வருடங்களாக காணவில்லை என்றார். (எ-11)

# ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு 5 நாட்கள் விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 23-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து 5 நாட்கள் வருடாந்த விடுமுறைக்காக மூடப்படுமென நிறுவனத் தலைவர் டாக்டர் ஜே.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார்.

மீண்டும் சேவையின் நிமிர்த்தம் டிசம்பர் 30-ம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வழமைபோல திறக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-49)

**மனத்தளர்வா? தனிமையா? தற்கொலை எண்ணமா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**

**021 222 8117**

(சி-5586)

# பல்வேறு நாடு...

எக்ஸ்சல் மண்டபத்தில் நடந்தது.

பிரிட்டனைச் சேர்ந்த "தமிழ் தேசிய நினைவேந்தல் அகவம்" என்னும் அமைப்பினால் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

நண்பகல் அளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பிரிட்டன் வாழ் தமிழர்கள் கலந்துகொண்டனர்.

**சுவிஸ்**

சுவிட்சலாந்து நாட்டில் பல்லாயிரம் மக்கள் புடை சூழ மாவீரர் தினம் எழுச்சியுடன் ஆரம்பமானது.

அகவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் ரகுபதி ஏற்றி வைத்தார்.

பொதுச் சுடரினை நிகழ்வின் சிறப்பு அதிதி தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்த வீரசந்தானம் ஏற்றி வைத்தார்.

**சென்னை**

அடுத்தகட்ட போர் பிரபாகரன் தலைமையில் நடக்க இருக்கிறது. அந்தப் போருக்கு இந்த பாசறையில் இருக்கும் போராளிகளும் பங்கேற்க வேண்டும் என்று பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

நவம்பர் 27 மாவீரர் தினம். உலகம் முழுவதும் உள்ள உணர்வாளர்கள் அனுசரிக்கும் நாள். இந்த நாளில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பழ.நெடுமாறன் தலைமையில் மாவீரர் தின அரங்க கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு ஏராளமானோர் குடும்பம் குடும்பமாக வந்து கலந்து கொண்டனர். சின்னாளப்பட்டி தனியார் பள்ளி மாணவர்கள் 60 பேர் வந்து முற்றத்தை பார்த்தனர்.

விழாவில் நெடுமாறன் பேசும்போது.. முற்றத்தை அழிக்க நினைப்பவர்கள் அழிந்து போவார்கள். இது தமிழினத்தின் அவலத்தின் துயர சின்னம். இந்த முற்றம் இனி போராளிகளை உருவாக்கும் பயிற்சி களமாக பாசறையாக செயல்படும்.

அடுக்கட்ட போர் பிரபாகரன் தலைமையில் நடக்க இருக்கிறது. அந்த போருக்கு இந்த பாசறையில் இருக்கும் போராளிகளும் பங்கேற்க வேண்டும் என்று பேசினார். (எ-11)

**பிள்ளையார் இன்**

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

**தொடர்புகளுக்கு:**

**இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021 222 2829**

(சி-5584)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5583)

# மரண அறிவித்தல்

## தானியல் றெக்ஷியன்

### (தலைவர் நெடுந்தீவு பிரதேச சபை)



வேலணை, சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தானியல் றெக்ஷியன் (ரஜீவ்) 26.11.2013 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் தானியல் - குலோத்தமை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கருணானந்தசிவம் - தனலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், அனிதாவின் அன்புக் கணவரும், டொறினா, கம்சன், டிலக்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசாத்தி, காலஞ்சென்ற ஞானசீலன், வசந்தி, ரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரவிந்தன், அமுதா, அகிலா, அஜந்தன், அனுசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 28.11.2013 இன்று வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புங்குடுதீவு சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**3ம் வட்டாரம், பெருங்காடு, புங்குடுதீவு.**

**தகவல்: குடும்பத்தினர்**

(4603)

# பாலியல் குற்றச்சாட்டில் 2012 வரை 1718 பேர் கைது

(கொழும்பு)

பெண்களை 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய குற்றத்திற்காக ஆயிரத்து 718 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள னர.

கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து இந்த எண் ணிக்கை படிப்படியாக அதிகரித்து 2008 ஆம் ஆண்டில் 319 ஆக அதிகரித்துள்ளது. பின்னர் 2012 ஆம் ஆண்டில் எண்ணி க்கை குறைந்து 252 பேர் கைதாகியுள்ள னர்.

குறிப்பாக 22 வயது முதல் 50 வயது வரையிலானவர்களே அதிகளவில் பெண் களை வல்லுறவுக் குட்படுத்தியுள்ளனர்.

2005 ஆம் ஆண்டில் 95 பேரும 2006 ஆம் ஆண்டில் 174 பேரும் 2007 ஆம் ஆண்டில் 235 பேரும் 2008 ஆம் ஆண்டில் 319 பேரும் 2009 ஆம் ஆண்டில் 227 பேரும் 2010 ஆம் ஆண்டில் 250 பேரும் 2011 ஆம் ஆண்டில் 166 பேரும் 2012 ஆம் ஆண்டில் 252 பேரும் கைதாகி சிறையில டைக்கப்பட்டுள்ளனர்.

2005 முதல் 2012 வரையிலான காலப் பகுதியில் 22 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்கள் 463 பேர் பாலியல் வல்லு றவு குற்றவாளிகளாக குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று 30 வயதுக்கும் 40 வய துக்கும் இடைப்பட்ட 691 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

40 வயதுக்கும் 50 இற்கும் இடைப் பட்டவர்கள் 501 பேரும், 60 வய துக்கு மேற்பட்டவர்கள் 33 பேரும் 50 இற் கும் 60 இற்கும் இடைப்பட்டவர்கள் 50 பேரும் கைதாகி சிறையிலடைக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு தெரிவிக்கிறது. (அ-2)

## தவறிவிட்டது

வடிவேல்ராசதுரை ஆகிய எனது தேசிய அடை யாள அட்டையும் வேலை அடை யாள அட்டை யும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக் கும் சுன்னாகத்திற்கும் இடையில் 25.11.2013 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- *வடிவேல் ராசதுரை 12/2, முதலியார் வளவு, வசந்தமாளிகை, சுன்னாகம். 0779598276* (4600)


## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:- இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சு/5541)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532


# கூடங்குளத்தில் கதிர்வீச்சு ஒழுக்கு ஏற்படின் அது இலங்கையைப் பாதிக்காது-சம்பிக்க

(கொழும்பு)

தென் இந்தியா-கூடங்குளத்தி லுள்ள அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு ஒழுக்கு ஏற்படும் பட் சத்தில் இலங்கை ஆபத்துக்கு உள்ளாகும் என்ற குற்றச்சாட்டை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச் சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நிராகரித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல கேள்வி நேரத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் அனோமா கமகேயின் கேள்வி க்கு பதிலளிக்கும் போதே அமை ச்சர் சம்பிக்க ரணவக்க மேற்க ண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சர்வதேச அணு அனர்த்த அளவுத் திட்டத்தில் 7 அளவில் கதிர் வீச்சு ஒழுக்கு ஏற்படின் அது இலங் கையை பாதிக்காது என அவர் கூறினார்.

இதுவே ஆகக்கூடியளவிலான அணு அனர்த்தமாகும். இந்த அளவில் ஓர் அனர்த் தம் இந் தியாவில் ஏற்படினும் அது இல ங்கையை பாதிக் காது என அவர் கூறினார்.

இவ்வாறான அணு அனர்த் தம் ஏற்படின் அதுபற்றி இலங்கை, சர்வதேச அணுசக்தி முகவரகம் மற்றும் இந்திய அணு சக்தி ஒழுங் குபடுத்தல் சபை ஆகியவற்றிடம் தொடர்பு கொண்டு அனர்த்தத்தின் தன்மை, அதன் இலங்கை மீதான தாக்கம் என்பவ ற்றைப்பற்றி அறிந்து கொள் ளுமென அமைச்சர் கூறி னார். (அ-2)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம்:- 13, ஆதன இலக்கம்:- 42 (புதிய பதிவு), கட்டுடை ஒழுங்கை

வட்டாரம் 13 கட்டுடை ஒழுங்கை ஆதன இலக்கம் 42 (புதிய பதிவு) அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில் பற்று சண்டிலிப்பாய் இறை *கிரியந்தனை*) என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நெற்பரப்பு இரண்டு (நெ.பர.02) கொண்ட இவ் ஆதனமானது கட்டுடை மானிப் பாயைச் சேர்ந்த சிறிதரன் பெண் நாகேஸ்வரி என்பவர்களால் அறுதி உறுதி மூலம் கட்டுடையை சேர்ந்த கருணாரட்ணம் பெண் யேசுமலர் என்பவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் வே.த.மு. கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேறிய 5358 ஆம் இலக்க 2003.10.31 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதன மானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்.

இவ் கிரியந்தனை நெற்பரப்பு இரண்டு (நெ.பர.02) இவ்வாத னத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரி மையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் கருணாரட்ணம் பெண் யேசுமலர் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். (4594)

தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1971 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 50 செவ் 1 ல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc / சிரேஸ்ர சந்தைப்படுத்தல் அலுவலர்<br>எதிர்பார்ப்பு: மணமகன் திருமண எழு த்து நடந்து விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/288 | பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 62 சூரி செவ் 4 ல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/049 |
| பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 26 செவ் 7 ல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc / நில அளவையாளர்<br>தொ.இ: B/289 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 37 சூரி செவ் 5 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/051 |
| பிறப்பு: 1978 கிறீஸ்தவம் (V)<br>நட்சத்திரம்: பரணி 2கி.பா: 39<br>செவ் 1 ல்உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BA / பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சமயம் மாற விரும்பு வோரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: B/294 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 28 ½உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc / SLAS - ADS<br>தொ.இ: G/053 |
| பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 24 ¼ செவ் 7 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc / AME Officer<br>தொ.இ: B/296 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 3கி.பா: 46 ¾<br>செவ் 9 ல்உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, முன்பள்ளி டிக்ளோமா /முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G/056 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



## மாபெரும் மலிவு விற்பனை & Year End Sales

25th Nov - 31st Dec 2013

**75% OFF**

யாழ்ப்பாணம் நெல்லியடி
கிளிநொச்சி வவுனியா
திருகோணமலை வெள்ளவத்தை




(சு/5582)

MICRO PC SYSTEMS

Conditions Apply

வெள்ளவத்தை:-115C, W.A Silva Mw,011-2367405,யாழ்ப்பாணம்:-218,Hospital Rd, 021-2225893, வவுனியா:-73, 2nd Cross St,024-2221969, நெல்லியடி:-Kodikamam Rd, 021-2262929,கிளிநொச்சி:-A9 வீதி கச்சேரி முன்னால் , 021-2285593, திருகோணமலை:- 235, Main St (வசீஹரன் ஹாட்வெயார் முன்னால்) , 026-2226977

# கரவை வெல்லன் விநாயகர் ஆலயச்சூழலில் கலாசார சீரழிவு

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(கரணவாய்)


கரவெட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள கரவை வெல்லன் விநாயகர் ஆலயத்தின் சுற்றாடலை இளைஞர்கள் யுவதிகள் கலாசார சீரழிவுக்கு உட்படுத்தி வருவதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி ஆலயத்துக்கு பிற்பகல் 5 மணி முதல் இரவு 8 மணிக்கு இடைப்பட்ட வேளையில் மோட்டார் சைக்கிளில் ஜோடியாக வரும் ஆண்களும் பெண்களும் கலாசார சீரழிவுகளில் ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளினால் ஆலய வழிபாட்டுக்கு செல்லும் பக்தர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு அயலிலுள்ள முருகன் ஆலயத்தின் குளக்கட்டுகளிலிருந்து மதுபானங் களை அருந்தி விட்டு வெற்றுப் போத்தல்களை குளத்தினுள் வீசி விட்டுச் செல்கின் றனர்.

இந்த அநாகரிகமான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருமானால் எதிர்காலத்தில் பாரிய சமூகப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படும் என சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே இச் செயற்பாடுகளை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸாரும் ஆலய நிர்வாகத்தினரும் கிராம மக்களும் ஒன்றிணைந்து ஆக்க பூர்வமான முயற்சிகளை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)




# 13 ஆவது திருத்த சட்டத்திற்கும் அப்பால் சென்று அரசாங்கம் தீர்வை தர வேண்டும்

## மாவை எம்.பி.வலியுறுத்து

(சாவகச்சேரி)

**எமது மக்களுடைய உரிமைக்கான, விடு தலைக் கான 60 ஆண்டு கால போராட்டத்துக்கு மதிப் பளிக்காது மக்களின் சொந்த நிலங்களைச் சூறையாடி அவர்களை, அவர்களது சொந்த நிலங்களுக்கு திரும்ப முடியாது தடை விதித்துள்ள சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக, புரட்சி வெடிக்கும் என, பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரால் 8 மில்லியன் ரூபா செலவில் கணனி மயப்படுத்தப்பட்ட வருமான வரிப்பகுதியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் இடம்பெற்ற சொத்தழிவுகளையும், இன அழிவுகளையும் சந்தித்த எமது மக்கள் அத்தனை கொடூர சோகங்களையும் தாங்கிக் கொண்டு, எம் மண்ணில் சுதந்திரமாக வாழ வேண்டும், நம்மை நாமே ஆழவேண்டும்,

அடு த்த சந்ததியாவது சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற நோக்கிலும் இது தொடர்பாக வடக்கு மாகாணசபைக்கு அதிகாரம் உண்டா? இல்லையா? என்ற சர்ச்சைக்கு மத்தியிலுமே கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர்.

சர்வதேசத்தினதும், இந்தியாவினதும் அழுத்தத்தினால் சர்வதேச கண்காணிப்பின் கீழ், நடைபெற்றமாகாணசபைத் தேர்தலில், மக்களின் எதிர்பார்ப்பு என்ன? எதற்காக வாக்களித்தனர்? என்பதை நாம் அவதானிக்க வேண்டும்

இந்நாட்டின் 13 ஆவது திருத்தச் சட்டம் எங்களுடைய அரசியல் தீர்வுக்கான அடிப்படையாகவோ, தீர்வாகவோ அமையாது என்பதை நாம் தீர்மானித்து விட்டோம்.

அதனை உலகநாடுகளும், இந்தியாவும் ஒப்புக்கொண்டுள்ளன. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாயின் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கும்அப்பால் சென்றே அதனைக் காண முனைய வேண்டும்.

ஆயினும், 13 ஆவது திருத்தச்சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூட இலங்கை அரசு பறித்தெடுத்து விட்டது.

இந்த நாடு முழுவதும் ஜனாதிபதி பேசுவது போன்று மஹிந்த சிந்தனையை பரப்பி, எம் மக்களை மீண்டும் அடக்கி ஒடுக்க முற்படின் எம்மத்தியிலிருந்து மிகப்பெரிய எதிர்ப்பு, புரட்சி என்பன ஆரம்பிக்கப்படும்.

அத்தோடு, முன்னர் போன்று அடக்கு முறை, ஊழல், விலை அதிகரிப்பு என்பன வற்றிற்கும் எதிராக புரட்சி வெடிக்கும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இவ் அரசு இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் அதிகாரங்களை வழங்கிவிட்டு அராஜகங்களை மூடி மறைத்து வருகின்றது.

ஆயினும், இந்த மாகாணசபை ஊடாக மக்களின் கண்ணீருக்குரிய காரணத்தை அறிந்து அதற்கு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண் டும். மக்களின் ஜனநாயக தீர்வுக்கு மதிப்பளிக்க முற்பட வேண்டும் எனவும் கூறினார். (அ-9-29)




# பிரதேச சபை உறுப்பினர்களின் வீடுகள் மீது தொடரும் தாக்குதல்கள்



(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினமான நேற்று யாழ். சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஸ்ரீஸ்கந்தராஜா ஸ்ரீரஞ்சன் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபை தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோரின் வீடுகள் மீது அதிகாலை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் ஸ்ரீரஞ்சன் கருத்து தெரிவிக்கையில்,

நேற்று அதிகாலை 12.10 மணியளவில் எனது வீடு அமைந்துள்ள வீதியில் இனந்தெரியாத நபர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் நடமாடுவதை அவதானித்திருந்தேன். தொடர்ந்து அதிகாலை 1.50 மணியளவில் ஆறு மோட்டார் சைக்கிள்களில் வந்திருந்த ஆயுததாரிகள் எனது வீட்டிலுள்ள ஜன்னல் கண்ணாடி களை அடித்து நொருக்கியும் தளபாடங்களை பெற்றோல் ஊற்றியும் எரித்தனர்.

நாங்கள் கூக்குரலிட்டதும் எம்மை நோக்கி துப்பாக்கியினால் சுட்டுவிட்டு ஆயுததாரிகள் சென்று விட்டனர். இருந்தும் எமக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை. இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் வீட்டுக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர் என்றார்.

இதேவேளை நேற்று அதிகாலை 1.15 மணியளவில் வலி. மேற்கு பிரதேச சபை தலைவர் நாகரஞ்சினி ஐங்கரன் வீட்டின் மீது இனந்தெரியாதோரினால் கல்லெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் வீட்டின் ஜன்னல்கள் மற்றும் கூரை சீற்கள் உடைந்துள்ளன. இதுதொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-6)

# வீதியில் எழும்பும் புழுதியால் பயணிக்க முடியாத நிலை

ஆனைக்கோட்டை- சங்கரத்தை வீதியின் வடிகான்கள் அமைக்கும் பணியில் தரையிலிருந்து எழும் புழுதி போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் குறித்த வீதியின் இரு மருங்கிலும் பாரிய இயந்திரங்களால் வடிகான்கள் வெட்டப்படுகின்றன. இதன்போது வெட்டப்படுகின்ற மண் வீதியின் இருமருங்கிலும் குவிக்கப்படுகின்றது. அவ்வாறு குவிக்கப்படுகின்ற மண் புழுதியாக பாரிய அளவில் எழும்புவதனால் அவ்வீதியூடாக பயணிப்பவர்கள் எதிரே வீதியில் வரும் வாகனங்களை அவதானிக்கமுடியாது திண்டாடுகின்றனர். அத்தோடு மண்குவியல்கள் வழிந்து தார்வீதிக்கு வருவதனால் வாகனங்கள் அவற்றுள் புதையுண்டு போக்குவரத்தில் சிரமத்தை ஏற்படுத்துகின்றன. எனவே உரியவர்கள் பயணிகளுக்கு இடையூறு இல்லாத வகையில் வடிகான்களை அமைக்க மாற்று நடவடிக்கைகளை கையாளவேண்டுமென மக்கள் கூறி வருகின்றனர். (அ-9-26)



சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட வருமானம் பகுதி திறப்பு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நாடாவெட்டி திறந்து வைப்பதனையும் அருகில் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவ. டிறிபேக் கல்லூரி அதிபர் த.அருந்தவபாலன் நிற்பதையும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஐக்சீல் மங்கல விளக்கேற்றுவதனையும் தவிசாளரின் துணைவியார் முதலாவது ஆதனவரியை செலுத்தி ஆரம்பித்து வைப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

# வெளிநாடுகளின் உதவியுடன் விரைவில் மருந்து கொள்வனவு

(கொழும்பு)

**வெளிநாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்களிடமிருந்து மருந்து வகைகளை கொள்வனவு செய்வதை கைவிட்டு வெளிநாட்டு அரசாங்கங்களுடன் உடன்படிக்கைகளை செய்து கொண்டு மருந்துவகைகளை கொள்வனவு செய்யவுள்ளோம். அதன்முதற்படியாக பங்களாதேஷ் அரசுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொணடு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் 2002, 2003 இரண்டரை வருட ஆட்சி வீழ்ச்சிக்கு காரணம் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அரச ஊழியர் களின் எண்ணிக்கை குறைப்பு எனபவையாகும்.

ஆனால் எமது ஆட்சியில் வைத்தியசாலைக் கட்டடங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. யாழ்ப்பாண வைத்தியசாலையிலேயே சிறந்த நவீன வசதிகளுடனான அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வரி வசூலிக்காது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் இருண்ட யுகத்தில் மக்கள் கொல்லப்பட்டனர். மறுபுறம் ஜே.வி.பி. மற்றும் விடுதலைப் புலிகளினால் மக்கள் கொலை செய்யப்பட்டனர். அரசசேவையில் இருந்த ஊழியர்களில் அதிகமானோர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலேயே குறைக்கப்பட்டனர்.

ஆனால் எமது ஆட்சியில் அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அரச சேவை ஸ்திரமாக்கப்பட்டது.

எனவே நாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு தரம்மிகுந்த மருந்து வகைகளை கொண்டு வரவுள்ளோம்.

சர்வதேசத்தில் சில நாடுகள் எமக்கெதிராக பொறாமையுடன் செயற்பட்டாலும் பலநாடுகளின் ஆதரவு எமக்கு கிடைத்துள்ளது.

அதன் உதவியோடு நாட்டை பலப்படுத்தி ஜனாதிபதி அபிவிருத்தியை ஏற்படுத்தி வருகின்றார். (அ-2)

# நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளன

**அமைச்சர் ரட்ணசிறி**

(கொழும்பு)

நாடு அபிவிருத்தி கண்டு வருவது மகிழ்ச்சி அளிக்கின்ற அதேவேளை மறுபுறத்தில குற்றச் செயல்களும் அதிகரித்துச் செல்கின்றன.

இவற்றை தடுத்து நிறுத்துவதற்கு புதிய கோணத்தில் சிந்தித்து செயலாற்ற வேண்டுமென்று சிரேஷ்ட அமைச்சர் ரட்னசிறிவிக்ரமநாயக்க தெரிவித்தார.

பாராளுமன்றத்தில் நேற்று முனதினம் இடம பெற்ற வரவு செலவு திட்டம் மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றுகையி லேயே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் அங்கு கூறு கையில்,

மேல் மாகாணத்துக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்த அபிவிருத்தி அனைத்தும் இன்று கிராமங்களுக்கு சென்றிருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். வீதி அபிவிருத்தி பாலங்கள் என அனைததும் கிராமங்களுக்கு சென்றுள்ளன.

இவை அனைத்தும் 2005 ஆம் ஆண்டின் பின்னரே இடம் பெற்றுள்ளன.

இவற்றின் அனுகூலங்கள் இன்றைய காலகட்டத்தில் உணரப்படாவிடினும் எதிர் காலத்தில் நன்கு உணரப்படும்.

அபிவிருத்தி ஒருபுறம் மகிழ்ச்சியளிக்கின்ற அதே வேளை மறு புறததில் குற்றச் செயல்கள் அதிகரித்து செல்கின்றன. எனவே மேற்கண்ட விடயங்கள் தொடர்பில் நாம் புதிய கோணத்தில் சிந்தித்து நடவடிக்கை வேண்டும்.

தற்போது நாட்டில் குற்றச் செயல்கள அதிகரித்து வரு வதற்கு மதத்தலங்களுக்கும் மக்களுக்கும் இடையில் இரு ந்த நெருக்கம் தற்போது குறைந்துள்ளமையே காரணமாகும். இது தொடர்பில்கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

# நாடு கடத்தப்பட்டார் கவிஞர் ஜெயபாலன்

(கொழும்பு)

பிரபல நடிகரும் கவிஞருமான ஜெயபாலன் நேற்று குடிவரவு குடியகல்வு அதிகாரிகளினால் நாடு கடத்தப்பட்டார்.

விசா விதிமுறைகளை மீறியமை தொடர்பான அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் இரவு துருக்கி ஊடாக அவர் நோர்வேக்கு நாடு கடத்தப்பட்டதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா கேசரியிடம் தெரிவித்துளளார்

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

TK731 Turkis என்ற விமானம் மூலம் அவர் துருக்கி நோக்கி அனுப்பப்பட்டதுடன் அங்கிருந்து நோர்வேக்கு அவர் நாடு கடத்தப் படவுள்ளார்.

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து சுற்றுலா விசா விதிமுறைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த வெள்ளி யன்று ஜெயபாலன் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டார்.

வவுனியா, மாங்குளம் பகுதியில் தனது தாயாரின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்த முற்பட்ட போதே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனை அடுத்து கடந்த சனிக்கிழமை முதல் மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட ஜெயபாலன் குடிவரவு குடியகல்வு அதிகாரியினால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அந்த விசாரணைகளில் ஜெயபாலன் விசா விதிமுறைகளை மீறியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அதனை அடுத்தே அவர் நாடு கடத்தப்பட்டார் என்றார்.

முன்னதாக, ஜெயபாலனை ஞாயிறன்று நோர்வே தூதரக அதிகாரிகளும் சந்தித்திருந்தனர். இந்நிலையிலேயே இந்த நாடு கடத்தல் இடம் பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

ஜெயபாலன் நோர்வே குடியுரிமை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அவுஸில் புலிகளுக்கு மேலும் மூன்று ஆண்டுகள் தடை

(கொழும்பு)

அவுஸ்திரேலிய அரசாங்கம் புலிகள்அமைப்புக்குஎதிரான தடையை மேலும் 3 வருடங்களுக்கு நீடித்துள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் அறிவித்துள்ளார்.

பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நிதி திரட்டுவதைத் தடுக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைச் சட்டத்தின் கீழ் இந்த தடை நீடிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுளளார்.

புலிகள் அமைப்புடன் அல்சஹறாப்மற்றும்ஐ.ஆர்.ஏபோன்ற பயங்கரவாத அமைப்புக்கள் மீதான தடைகளும் நீடிக்கப பட்டுள்ளன.

புலிகள் அமைப்பிற்கு அவுஸ்திரேலியாவில் எவ்விதமான நிதி சேகரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட இடமளிக்க முடியாதென அவுஸ்திரேலிய அரசாங்கம திட்டவட்டமாக அறிவித்தது.

பயங்கரவாதம் அவுஸ்திரேலியாவுக்கும் அச்சுறுத்தலாக இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் அவர் எந்தவகையிலான பயங்கரவாத செயற்பாடுகளையும் தமது அரசாங்கம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுவரை இந்தியா, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட 32 நாடுகள்புலிகள் அமைப்பை தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## விசேட தேவையுடையோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தின விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி றொமைன் மண்டபத்தில் யாழ்.விழிப்புணர்வற்றோர் சங்கப் பொருளாளர் பர்ணாந்து கமிலஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. திருமதி சுந் தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலை கண் வைத்திய நிபுணர் வைத் திய கலாநிதி எம்.மலரவன், தெல்லிப்பழை யூனியன்கல்லூரிவிசேட கல்வித்துறை ஆசிரியர் வி. விஸ்ணுகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## க.பொ.த.(சா/த) பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் க.பொ.த.(சா/த) பரீட்சையில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்புநிலைய அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவிமேற் பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்தில்கலந்துகொண்டால்மட்டுமே பரீட்சைக் கடமைகளில் கடமையாற்ற முடியும்.

எனவே, தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ)

# பாலர் கல்விக்கழக கலைவிழா

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம்அறிவொளி சனசமுக நிலையத்தின் அனுசரணையுடன் பாலர் கல்விக் கழக நிர்வாகத்துடன் இயங்கும் ஞானக் குழந்தை இல்ல அறிவொளி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த கலை விழா நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அறிவொளி சனசமுக நிலைய தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை அதிபர் நடராசா கந்தவனச் செல்வன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.அருந்தவராசா, பாலர் கல்விக் கழக தலைவர் எஸ்.பி. காசிநாதன், பாலர் கல்விக் கழக செயலாளர் திருமதி தெ.இரட்ணகோபால், யாழ். மாநகர சபை பொது சன தொடர்பு உத்தியோக த்தர் ச.யோகசிவம், ஜே/99 கிராம அலுவலர் திருமதி பிர தீபா காண்டீபன், ஜே/88 கிராம அலுவலர் மா.பஞ்சலோகரஞ்சன், இக் கிராம சேவையாளர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.மதிவதனா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)


31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம்
10.04.1929



அமரர் தம்பியப்பா தில்லைநாதன்

மறைவு
29.10.2013

கண்ணீருக்கு தடை போட்டது போல
உம் நினைவுகளுக்கு தடை போட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே தந்துவிட்டு
நீர் எங்கு சென்றீரோ!

கடந்த 29.10.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதி வரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (28.11.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

359/34, நல்லலெட்சுமி அவெனியூ
கோயில் வீதி, நல்லூர்.

(4595)

குடும்பத்தினர்.

# இன்று ஒரு தகவல்

## காலநிலையை அறிவிக்கும் விலங்குகள்

துருக்மீனியாவில் அஷ்காபாத் நகரத்தில் ஒரு புவியியல் விஞ்ஞானி இருந்தார்.

அவர் ஒரு நாய்க்குட்டி வளர்த்தார்.

ஒருநாள் முன்னிரவு நேரம். ஒரு மேசைக்கு முன்னால் உட்கார்ந்து அந்த விஞ்ஞானி ஏதோ கணக்குப் போட்டு கொண்டிருந்தார்.

அவருடைய குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது.

அந்த நாய்க் குட்டியும் ஒரு மூலையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தது. ஒரே அமைதி. அந்த நேரத்தில் திடீரென்று அந்த நாய்க்குட்டி துள்ளியெழுந்தது. நேராக அந்தக் குழந்தையிடம் ஓடியது.

அந்தக் குழந்தையை அது போட்டிருந்த சட்டையுடன் சேர்த்து கௌவிக் கொண்டு வாசல் பக்கமாக ஓடியது.

நாய்க்குட்டி குழந்தையை கௌவி தூக்க முடியுமா என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.

நீங்க நம்ம ஊர் நாய்க்குட்டியையே பார்த்துப் பழக்கப்பட்டு விட்டீங்க. அதனால் நம்புவதற்கு சிரமப்படுகிறீர்கள். அந்த ஊரிலெல்லாம் வலிமையான பெரிய நாய்கள் உண்டு.

விஞ்ஞானி அதைப் பார்த்துவிட்டார். உடனே அந்த நாய்க்கு வெறி பிடித்துவிட்டது என்று முடிவு செய்துவிட்டார். தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடிவந்தார். அவர் வெளியே வந்து நாய்க்குட்டி எங்கேயென்று தேடினார். அந்த நேரத்தில் அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஆம். அவருடைய வீடு பூமியதிர்ச்சி காரணமாக இடிந்து விழுந்தது. இப்படி பூமி அதிர்ச்சி உண்டாகப்போகிறது என்பது அந்த நாய்க்கு முன்பே தெரிந்து விட்டது. அதுதான் அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடி வந்திருக்கிறது. அதன் மூலமாக அந்த குடும்பத்தையே காப்பாற்றியிருக்கிறது.

இந்தச் சம்பவம் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே சில பிராணிகளுக்கு இப்படி நடக்கப் போகிறது என்பது தெரிந்திருக்கிறது.

ஆமாம். அந்த நகரத்தில் மூன்று நாட்களுக்கு முன்பே பாம்பு, பல்லியெல்லாம் வளையை விட்டு வெளியே வந்து விட்டன.

அதேபோல் அங்கேயிருந்த புறாவெல்லாம் பறந்து போய்விட்டதாம். இதேபோல்... யூகோஸ்லாவியாவிலுள்ள ஒரு நகரத்தில் மிருகக்காட்சி சாலையொன்று இருந்தது. அங்கு ஒரே கூச்சல் குழப்பம். அங்கிருந்த யானை, புலி, கரடி, பறவையெல்லாம் கத்த ஆரம்பித்தன.

நீர்யானை அதற்கென்று போடப்பட்டிருந்த தடுப்பை தாண்டிக் குதித்து வெளியே வந்துவிட்டது.

மறுநாள்தான் எல்லோருக்கும் விடயம் புரிந்தது. அடுத்த நாள் காலையில் அங்கே பூமியதிர்ச்சி உண்டாகிவிட்டது. இப்பொழுது என்ன நினைக்கிறீர்கள்?

இவற்றையெல்லாம் விலங்குகள் எப்படி முன்கூட்டியே புரிந்து கொள்கின்றன? அதுதான் படைப்பின் இரகசியம்.

அதைக் கண்டுபிடிப்பதற்குத்தான் மனிதன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறான். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியெல்லாம் இருக்கட்டும். வீட்டுக்குள்ளேயே சில ஆராய்ச்சி செய்து பாருங்களேன். இப்பொழுது மழை வருமா வராதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?

உடனே ஒரு பூனைக்குட்டிக்குப் பின்னால் போய் நின்று அது என்ன செய்கிறது என்று கவனியுங்கள்.

பூனைக்குட்டி தன் பாதத்தினால் சுவரில் கீறிக் கொண்டிருக்கும். அப்படிக் கீறினால் மழை வரும்.

சிலசமயம் பூனைக்குட்டி மல்லாந்து படுத்துக் கொண்டு பாதத்தை உயரே தூக்கும். அப்படியும் இப்படியும் புரளும். இப்படிச் செய்தால் அன்றைக்கு மழை இருக்காது.

பறவைகள் - பிராணிகள் போன்றவற்றின் நடவடிக்கைகளை பார்த்துவிட்டு அதையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் காலநிலையை கண்டுபிடிக்கும் கருவிகளை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சில நேரங்களில் வாத்து தன்னுடைய அலகை தனது இறகுகளில் புதைத்திருக்கும். அப்படிச் செய்தால் குளிர்காலம் வரப்போகிறது என்று அர்த்தம். பருவநிலை குளிராக மாறப் போகிறது என்பதற்கு இதுதான் அறிகுறி.

சிட்டுக்குருவி சில நேரங்களில் புழுதியில் விழுந்து புரளும். சிறகுகளை படபடவென்று அடித்துக் கொள்ளும். அப்படிச் செய்தால் மழைவரப்போகிறது என்று அர்த்தம்.

ஒன்று மட்டும் நாம் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையின் சீற்றம் என்று சொல்கிறோமல்லவா! இயற்கை ஏன் நம்மீது கோபப்படுகிறது. இயற்கையை நாம் அனுசரித்துப் போவதில்லை . அதனால் கோபப்படுகிறது. காடுகளை அழிக்கக் கூடாது. விலங்குகளை கொல்லக்கூடாது. இயற்கையின் சமநிலைமை கெடுக்கக்கூடாது.

அதைப்புரிந்து கொண்டு வாழ்ந்தால் பூமியும் நடுங்காது. நாமும் நடுங்க வேண்டிய அவசியமில்லை. ஒருத்தர் சாராயக் கடைக்குப் போய் நிறையக் குடித்தார். அதன் பின் சொன்னார்: "இது ரொம்ப அற்புதமான சரக்கு போலிருக்கிறது. உள்ளே போனவுடன் இந்த பூமியே நடுங்குவது போலிருக்கிறது" என்றார். இதற்கு கடைக்காரர் சொன்னார்:

"நீங்கள் குடித்தது வெறும் தண்ணிதான். ஆனால் இப்ப ஏற்பட்டிருப்பது பூமியதிர்ச்சி" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# எமது மக்கள் அரசியலுரிமையுடன் வாழ தெரிவுக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அலென்ரின் எம்.பி. தெரிவிப்பு

எமது மக்கள் கடந்தகால கசப்பான அனுபவங்களில் இருந்தும் பின்னடைவுகளில் இருந்தும் மீண்டும் எழவில்லை. அவர்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும தனித்துவமாகவும் வாழக்கூடிய சூழல் வளர்த்தெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எமது பகுதிகளில் வாழ்ந்து வரும் மககளில் பெரும்பாலானோர் கமத்தொழிலையும் கடற்றொழிலையும் முக்கிய வாழ்வாதாரமாக கொண்டவர்கள். கடந்த 30 வருட காலத்துக்கு மேலாக நிலவிய அழிவு யுத்தம் காரணமாக எமது பகுதிகளில் பாரிய அழிவுகள் ஏற்பட்டதுடன், எமது மக்கள் அனைத்துதுறைகள் சார்ந்தும் பல தசாப்தங்களுக்கு பின்நோக்கிச் சென்ற நிலையிலேயே வாழ்ந்து வந்தார்கள்.

அந்த வகையில் கமத்தொழில் உட்பட கடற்றொழில்மாத்திரமன்றி ஏனைய அனைத்துதுறைகளும் மிகுந்த பின்னடைவையே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குருநகர் இறங்குதுறையை விரைவில பூர்த்தி செய்வதாக கூறப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அத்துடன், எமது கடற்றொழிலாளர்களுக்கு மேலும் பல்வேறு தேவைகள் உள்ளன. குறிப்பாக படகுகள மற்றும் ஏனைய உபகரணங்கள் அவர்களுக்குத் தேவையாகவுள்ளன.

கடந்த கால அழிவு யுத்தம் எமது பகுதிகளில் பெருந்தொகையான விசேட தேவையுடையோரை உருவாக்கித்தந்துள்ளது. எனவே, விசேட தேவையுடையோரை தலைமையாகக்கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவித்திட்டத்தில அதிகளவு பயனாளிகளை எமது பகுதிகளில இருந்து தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

கடந்த கால யுத்தநிலை காரணமாக 1985, 1990, 1996 ஆகிய வருடங்களில் யாழ். மாவட்டத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்து, நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் மற்றும் நண்பர்களது இல்லங்களிலும இன்னமும் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த வகையில் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 7 நலன் புரி நிலையங்களில் 227 குடும்பங்களைச் சேர்ந்த 786 பேரும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 5 நலன்புரி நிலையங்களில் 221 குடும்பங்களைச் சேர்ந்த 895 பேரும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 9 நலன்புரி நிலையங்களில் 384 குடும்பங்களைச் சேர்ந்த 1372 பேரும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களைத் தவிர பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 648 குடும்பங்களைச் சேர்ந்த 2186 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்களது இல்லங்களில் தங்கி வருகின்றனர்.

சொந்த இடங்களில் இவர்கள் வாழ்ந்திருந்த போது பெரும்பாலும் கமத்தொழிலையும் கடற்தொழிலையும் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டு இருந்தனர்.

இம்மக்கள் பல வருட காலமாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மீண்டும் இம்மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படும் வரையில் அவர்களது நலன சார்ந்த திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமானது.

அத்துடன் இதுவரையில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு உட்கட்டமைப்பு முதற்கொண்டு பல்வேறு வசதிகளை அரசாங்கம் செய்து வருகிறது. எனினும் இப்பணிகள் இன்னமும் அம் மக்களது தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தற்போது பருவ மழை காலம் ஆரம்பித்துள்ளதால் அம் மக்கள் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் தான் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த கால யுத்தம் காரணமாக கணவனமாரை இழந்த பெண்களின் எண்ணிக்கை எமது பகுதிகளில் அதிகரித்து காணப்படுகிறது. பல குடும்பங்கள் பெண்களையே தலைமைத்துவமாகக் கொண்டும் உள்ளன. எனவே இவர்களுக்கான சுயதொழில் முயற்சிகளை அதிகமாக உருவாக்கிக் கொடுக்க வேண்டியுள்ளது.

இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வட்டியில்லாக் கடன் தொகைகளை வழங்த நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

நமது நாட்டின் கலைஞர்களின் வசதிகருதி அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ள விடுமுறை விடுதிகளில் ஒன்றை யாழ்.மாவட்டத்திலும் அமைக்கும்படி கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

எனவே பாரிய பின்னடைவுகளில் இருந்து மீண்டுள்ள எமது மக்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் தனித்துவமாகவும் வாழக்கூடிய சூழல் வளர்த்தெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 15 - 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 120 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 | 100 |
| தக்காளி | 25 | 40 | 50 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 | 40 |
| கோவா | 25 | 30 | 40 | 40 |
| கரட் | 35 | 40 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 | 50 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 35 | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 190 | 220 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 170 | 140 | 140 |
| பாகற்காய் | 60 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 20 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 | 50 |
| பயற்றங்காய் | 30 | 40 | 30 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 25 | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 110 | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 50 | 80 | 80 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 15 | 15 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 - 120 | 120 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25 - 60 | 50 | 30 - 45 | 35 - 45 |

# இராசி பலன்

*28.11.2013*
*(கார்த்திகை 12, வியாழக்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.06மணிக்கு*
*தசமி முற்பகல் 11.46 மணிவரை*
*உத்தரம் முற்பகல் 8.22 மணிவரை*
*இராகுகாலம் 1.43 - 3.13 மணிவரை*
*சுபநேரம் 7.43 - 9.13 மணிவரை*

**மேடம்** கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்** பூர்விக சொத்துகளால் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரும், பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வருமானம் திருப்தி தரும், பொதுக்காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கூட்டு முயற்சி வெற்றி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தொலைபேசி மூலம் நிம்மதி தரும் செய்திகள் வந்து சேரலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், பயணங்களால் பயனுண்டு.

**விருச்சிகம்** சகோதர ஒற்றுமை மேலோங்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர்கள் வருகையுண்டு, கௌரவமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், அன்னியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், சான்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தல் சில மனக்கஷ்டங்கள் ஏற்படலாம், விரயங்கள் கூடும், போசன சுகம் உண்டு.

**மீனம்** குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், வருமானம் திருப்தி தரும், அபூர்வ சந்திப்புண்டு, கௌரவமான நாள்.

வளவன்

# தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள் அனுமதிக்க முடியாது - அமைச்சர் டெனிஸ்வரன்

(மன்னார்)

**தமிழர் பிரதேசங்களில் அரசின் திட்டமிடலுடன் நடைபெறும் சிங்கள் குடியேற்றங்களை அனுமதிக்க முடியாது என அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் பெரியகடை மீனவர் கூட்டுறவு சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினதும் ஏற்பாட்டில் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையோடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரியகடை பலநோக்கு மண்டபத்தில் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனுடன் மக்கள் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் பெரியகடை மக்களது பிரச்சினைகள் அமைச்சரிடமும் பாராளுமன்ற உறுப்பினரிடமும் முன்வைக்கப்பட்டன. அதில் ஒழுங்கான வடிகாலமைப்பு வசதிகள் இல்லை, காணிகள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் அவற்றுக்கான சரியான எல்லைப்படுதல்களில் அதிகாரிகள் சாட்டு போக்கு சொல்லுவதாகவும், இக்காணிகள் அமைந்த இடம் நகர்பகுதியாக இருந்தும் தெருவிளக்குகள் இன்றியே இப்பகுதி காணப்படுவது உட்பட இவ்வாறு பல பிரச்சினைகளை மக்கள் முன்வைத்தனர்.

தொடர்ந்து மக்களது கேள்விகளுக்கு பதிலளித்துவிட்டு அமைச்சர் உரை நிகழ்த்துகையில், நீங்கள் என்னை அழைக்காது இருந்திருந்தாலும்கூட நிச்சயமாக நான் வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து கிராமங்களின் மக்களை சந்திப்பதற்கான நிகழ்ச்சி திட்டமொன்றை வகுத்து வைத்துள்ளேன். எனவே அந்த வகையில் உங்கள் கிராமத்தவர்களையும் சந்தித்திருப்பேன்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் தமிழர்களும் முஸ்லிம்களும் முந்திய காலங்களில் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை என்றும் எனவே அந்த ஒற்றுமையான வாழ்வு மீண்டும் உதயமாவது நிச்சயம் உருவாகும் எனவும் இங்கு தற்போது அரசாங்கத்தினால் திட்டமிட்டு நடைபெறும் தென்பகுதி மக்களின் குடியேற்றங்களை எமது சமூகங்கள் ஒரு போதும் அனுமதிக்க முடியாது அவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மன்னார் நகரத்தில் மதுபான சாலைகள் மூடப்பட்டமையால் ஒவ்வொரு வீடும் மது பானசாலையாக மாறியுள்ளதென மக்கள கூறும் கருத்துக்களை தான் ஏற்றுக் கொள்வதாகவும் அதனை தடுப்பதற்கான வேலை த் திட்டங்களை எதிர்காலத்தில் தான் மேற்கொள்ளவுள்ளதாகவும் அதோடு மக்கள் முன்வைத்த பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி அதற்கான சரியான தீர்வை வெகு விரைவில் வழங்குவதாகவும் உறுதி கூறினார். இச்சந்திப்பில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கமும் கலந்து கொண்டிருந்தார். (ம-4)

## சிறுமி துஷ்பிரயோகம்; வயோதிபர் கைது



(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் வீடியா பாம் கிராமத்தில் விசேட தேவைக்குரிய 16 வயதுடைய சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் 65 வயதுடைய வயோதிபர் செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜெ. ஜெயக்கெனடி தெரிவித்தார்.

விசேட தேவைக்குரிய இச் சிறுமி வீட்டில் தனியாக இருந்தபோதே இவ் வயோதிபர் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தனக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதனையடுத்து செட்டிகுளம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (ம-250)

## போலி விண்ணப்பப்படிவம் விநியோகம் எனக்குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ,புதுக்குடியிருப்பில் வேலை வாய்ப்புத் தருவதாகக் கூறி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் சிலர் போலி விண்ணப்பப்படிவங்களை விநியோகித்து வருகின்றனர்.

எனவே அவற்றை நம்பி ஏமாற வேண்டாம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் தெரிவித்துள்ளார்.

2011 இற்காக வடமாகாண கனிஷ்ட ஊழியர்கள் பதவிகளை நிரப்புவதற்கும் பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஆட்சேர்ப்பு எனவும் கூறப்பட்டே கடந்த சனிக்கிழமை முதல் இவ்விண்ணப்பப்படிவங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆகவே இவ் ஏமாற்று வேலைகள் தொடர்பில் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## அட்டமஸ்கட சிறுவர்கள் 8 பேர் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(குருமன்காடு)

வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில விகாராதிபதியினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக சிறுவன் ஒருவன் கொடுத்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் விகாராதிபதி கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தில் பொறுப்பேற்கப்பட்ட 21 சிறுவர்களில 8 சிறுவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று முன்தினம் சிறுவர்களின் உறவினர்களிடம் நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு நிலைய பொறுப்பதிகாரி தி.மனோகரராஜாவால் ஒப்படைக்கப்பட்டனர்.



இதன் போது சிறுவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளும் அச் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டன. (ம-250)

## அனுமதியற்ற விளம்பர பதாகைகளுக்கு தடை

கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி விளம்பர பதாகைகளை வைப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் சு.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

உற்பத்தி, விற்பனை தொடர்பான விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும் உற்பத்தியாளர்கள் மற்றும் நிறுவனத்தினர் கரைதுறைப் பற்று பிரதேசசபையிடம் விண்ணப்பி-த்து அனுமதி பெற்ற பின்னரே அவற்றைக் காட்சிப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். அனுமதி இன்றி காட்சிப்படுத்துவோர் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-267)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:

021 321 0815,

021 567 1532






## மன்னார் சிறுவர் பூங்காவுக்கு அருகில் புதிய கடைத்தொகுதி

(மன்னார்)

மன்னார் நகரப்பகுதியிலுள்ள சிறுவர் பூங்காவுக்கு அருகில் பல இலட்சம் ரூபா செலவில் கடைத்தொகுதியொன்று தற்போது அமைக்கப்பட்டு வருவதாக மன்னார் நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மன்னார் நகரசபை முன்னெடுத்துவருகின்ற நிலையிலே, இக்கடைத்தொகுதி வேலைத்திட்டமும் இடம்பெற்றுவருவதாக அவர் கூறினார்.

மன்னார் சிறுவர் பூங்காவுக்கு அருகில் 40 கடைகள் அமைக்கப்படவுள்ள நிலையில், முதற்கட்டமாக 21 கடைகளை அமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கடையும் 10 அடி நீளமும் 10 அடி அகலமும் உடையதாக அமைக்கப்படும். கடையொன்றுக்கு கட்டுமான செலவு ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபா எனவும் அவர் கூறினார்.

புதிதாக அமைக்கப்படும் கடையொன்றுக்காக 5 இலட்சம் ரூபா பெறப்படுமென்பதுடன், மன்னாரை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வியாபாரிகளுக்கு இக்கடைகள் நிரந்தரமாக வழங்கப்படவுள்ளன.

மேலும் இக்கடைகள் வேறோருவருக்கு கைமாற்ற முடியாதெனவும் அவர் கூறினார்.

இக்கடைத்தொகுதிக்கான நிர்மாணப் பணிகள் இன்னும் ஒரு வாரத்தில் நிறைவடையவுள்ளன. நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர் மன்னார் நகரசபைக்குச் சொந்தமான வாரச்சந்தை பகுதியிலுள்ள கடைகள் அகற்றப்பட்டு தற்போது அமைக்கப்பட்டுவரும் புதிய கடைத்தொகுதிக்கு மாற்றப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், மன்னார் நகரசபைக்குச் சொந்தமான வாரச்சந்தைப் பகுதியிலிருந்து மாற்றப்படும் கடைகள் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கடைத்தொகுதிக்கு மாற்றப்பட்ட பின் பழைய சந்தைப்பகுதி வாராந்த (சனி,ஞாயிறு) பொதுச் சந்தையாக மாற்றப்படவுள்ளது.

இதன் மூலம் உள்ளூர் உற்பத்தி யாளர்கள் மற்றும் வெளியூர் உற்பத்தியா ளர்களின் உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு, குறித்த சந்தைப்பகுதியில் தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல ஒரு களமாக இது அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-250)

## ஆலோசனை வழிகாட்டல் திட்டமிடல் செயலமர்வு

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான திட்டமிடல் செயலமர்வு இன்று காலை 8 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.செ. அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

2014 ஆம் ஆண்டில் வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படவுள்ள ஆலோசனை வழிகாட்டல் சேவை தொடர்பான செயற்பாடுகள் நாளாந்த கடமைகள், விசேட செயற்றிட்டங்கள் தொடர்பாக நடைபெறவுள்ள இத்திட்டமிடல் செயலமர்வில் வளவாளர்களாக வவுனியா தெற்கு வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப் பாளர் திருமதி நா. மாணிக்கவாசகம், ஆறு. சுபாஸ்கரன், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி. ந.இ.கிரேனியர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் ஆலோசனை வழிகாட்டல் திட்டமிடல் செயலமர்பில் 2014 ஆம் ஆண்டு பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் மற்றும் தொழில் வழிகாட்டல் சேவையில் ஈடுபடவுள்ள பொருத்தமான ஆசிரியர்களைப் பங்கு பெற நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. செ.அன்ரன் சோமராஜா அதிபர்களைக் கேட்டுள்ளார். (ம-266)




# புதையல்

திருவெண்ணெய் நல்லூரில் பார்த்தசாரதி என்ற பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்த பொருளைப் பார்த்தாலும் அதை தான் அடைய வேண்டும் என நினைப்பான். எனவே, நாளடைவில் பார்த்தசாரதி என்ற அவனுடைய பெயரே மறைந்து போய் பேராசைக்காரனாயிற்று.

ஒருநாள் வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான்.

வியாபாரம் முடிந்து காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்தக் கிணற்றருகே சென்றான்.

ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைக கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.


கிணற்றுக்குள் இருந்து "யார் இங்கே தண்ணீர் எடுப்பது?" என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில், "ஐயா! நான் ஒரு ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் நான் தெரியமாட்டேன்," என்றது அந்தக் குரல்.

"மந்திரக் கிணறா? விரும்பியதை எல்லாம் தருமா?" என்று வியப்புடன் கேட்டான் அவன்.

"உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்," என்றது அந்தக் குரல்.



"என்னதான் நடக்கிறது பார்ப்போமே" என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான். "விலையுயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்..." என்றான் அவன்.

ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைநதான் அவன்.

"ஆ! ஏராளமான செல்வம் கிடைத்துவிட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ் செல்வன் நான் தான்," என்று மகிழச்சியுடன் சொல்லிக்கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

"ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே... அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசுகளையும் கைப்பற்றிக் கொளவார்களே! என்ன செய்வது?" என்று சிந்தித்தான்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

"வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக கூடாது," என்று கேட்டான்.

"அப்படியே ஆகட்டும்," என்று குரல் வந்தது.

வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் ஓடினான். "இனி நாமோ நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டாம். அரசனைப் போலச் செல்வச் செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். "என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே," என்றாள்.

அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும் நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, ""வண்டியை நன்றாகப் பார்," என்றான்.

நன்றாகப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன் என்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலை மதிப்பற்ற பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன் வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டிற்குச் சென்றான்.

அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும். பொருட்களும் கீழே கொட்டிச் சிதறின.

என்ன பிரயோஜனம். அவை இவன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தன. தன்னுடைய பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்தசாரதி.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1520-தென் அமெரிக்கா ஊடாகப் பயணித்த போர்த்துக்கேய நாடுகாண் பயணி மகலன் பசிபிக் பெருங்கடலை அடைந்தான். இவனே அட்லாண்டிக் கடலில் இருந்து பசிபிக் கடலை அடைந்த முதலாவது ஐரோப்பியர் ஆவான்.
- 1729-மிசிசிப்பியில் நட்சே இந்தியர்கள் குழந்தைகள், பெண்கள் உட்பட 239 பிரெஞ்சு இனத்தவரைக் கொன்றார்கள்.
- 1821-பனாமா ஸ்பெயினிடம் இருந்து பிரிந்து கொலம்பியாவுடன் இணைந்தது.
- 1843-ஹவாய் இராச்சியத்தை ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் ஆகியன விடுதலை அடைந்த தனி நாடாக அங்கீகரித்தன.
- 1893-நியூசிலாந்தில் முதற்தடவையாக பெண்கள் வாக்களித்தனர்.
- 1905-ஐரிஷ் தேசியவாதி ஆர்தர் கிறிபிக் அயர்லாந்தின் விடுதலைக்காக சின்ஃபெயின் என்ற அரசியல் கட்சியை உருவாக்கினார்.
- 1912- அல்பேனியா ஒட்டோமான் பேரரசிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1918-புக்கோவினா ருமேனிய இராச்சியத்துடன் இணைய முடிவு செய்தது.
- 1942- மசாசுசெட்ஸ் மாநிலத்தில் பொஸ்டன் நகரில் இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயினால் 491 பேர் இறந்தார்கள்.
- 1943- இரண்டாம் உலகப்போர்: ஜெர்மனியையும் ஜப்பானையும் ஒடுக்குவது பற்றி, அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியத் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்ய ஜனாதிபதி ஜோசுப் ஸ்டாலின் ஆகிய மூவரும் டெஹ்ரானில் சந்தித்துப் பேசினார்கள்.
- 1944- இரண்டாம் உலகப்போர்: அல்பேனியா, அல்பேனியப் பார்ட்டிசான்களினால் விடுவிக்கப்பட்டது.
- 1958-சாட், கொங்கோ குடியரசு, காபோன் ஆகியன பிரெஞ்சு ஆட்சியின் கீழ் சுயாட்சி பெற்றன.
- 1960-மௌரிதேனியா பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1964-நாசா செவ்வாயக்கோளை நோக்கி மரைனர் 4 விண்கலத்தை ஏவியது.
- 1975- கிழக்குத் திமோர் போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1989-பனிப்போர்: செக்கோஸ்லோவாக்கியாவின் தனியாதிக்க உரிமையை விட்டுத் தருவதாக அந்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.
- 1991-தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்த்து.
- 1994-ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய நோர்வே மக்கள் எதிர்த்து வாக்களித்தனர்.
- 2006- நாசாவின் நியூ ஹறைசன்ஸ் தானியங்கி விண்கலம் புளூட்டோவின் முதலாவது படத்தை அனுப்பியது.


## பிறப்புக்கள்

- 1820-பிரெட்ரிக் ஏங்கல்ஸ், ஜேர்மன் அரசியல் மெய்யியலாளர் (இ.1895)
- 1864-ஜேம்ஸ் ஆலன், ஆங்கில எழுத்தாளர் (இ.1912)
- 1984-ஆன்றூ போக், ஆஸ்திரேலிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புக்கள்

- 1694-மட்சுவோ பாஷோ, ஜப்பானியக் கவிஞர் (பி.1644)
- 1939-ஜேம்ஸ் நெய்ஸ்மித், கூடைப்பந்து கண்டு பிடிப்பாளர் (பி.1861)
- 1954-என்றிக்கோ பெர்மி, இத்தாலிய இயற்பியலாளரும் நோபல் பரிசுபெற்றவரும் (பி.1901)

## மரைனர் திட்டம்



மரைனர் திட்டம் என்பது செவ்வாய், வெள்ளி, மேர்க்குரி ஆகிய கோள்களை ஆராய்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் நாசா விண்ணாய்வு மையத்தினால் விண்ணுக்குச் செலுத்தப்பட்ட ஆளில்லாத தானியங்கி விண்கப்பல்களுக்கான திட்டமாகும்.


பூமியில் இருந்து வேறொரு கோளுக்கு முதன்முதலில் ஒரு விண் கப்பலை இத்திட்டத்தின் மூலம் அனுப்பினர். அதுமட்டுமன்றி வேறொரு கோளை அதன் ஒழுக்கில் சுற்றி வந்த முதலாவது விண்கப்பலும் இத்திட்டத்திலேயே அனுப்பப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 10 வான் கப்பல்கள் அனுப்பப்பட்ட போதும் இவற்றில் ஏழு மட்டுமே வெற்றியளித்தன.

இம்மரைனர் திட்டத்தில் மரைனர் 1,2,5,10 என்பன புதன் கோளை நோக்கியும், மரைனர் 3,4,6,7,8,9 என்பன செவ்வாய் கோளை நோக்கியும் செலுத்தப்பட்டன.

இவற்றில் முதன்முதலாக செவ்வாய்க்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்ட கப்பல்– மரைனர் 4 ஆகும்.

# வீட்டுல நீங்க ஆபீஸரா....?



ஆன்மீகம் 51

கேள்வி: அலுவலகத்திலும், வீட்டிலும் ஏன் வெவ்வேறு விதமாக நடந்து கொள்கிறோம்? சில நேரங்கள் நான் என் அலுவலத்தில் நல்லபடியாக நடந்து கொள்கிறேன், ஆனால் வீட்டில், அதே விதமாக நடந்துகொள்ள முடியவில்லை என்றும் உணரகிறேன். ஏன் இந்த இரண்டுபட்ட நிலை?

சத்குரு: நாம் வாழ்வது 21 ம் நூற்றாண்டு என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், வீட்டில் இருப்பவர்களும் உங்களை பணிநீக்கம் செய்ய முடியும்.

இனியும் அது ஒரு நிரந்தர பதவி கிடையாது.

நம் பெண்களும் துரிதமாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உலகில் உள்ள அனேகமான ஆண்களுக்கு அவர்கள் என்ன செய்தாலும் "நம் மனைவி பொறுத்துக் கொள்வாள்," என்கிற மனோபாவம் வலுவாகவே இருக்கிறது.

அப்படி நினைத்துக் கொண்டிருப்பவர்களில் நீங்களும் ஒருவரா? அவர்கள் மாறிக் கொண்டிருக்கின்றனர் என்பதை நீங்கள் வெகு சீக்கிரமாக புரிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் அவர்களுக்காக வாழாத பட்சத்தில் அவர்கள் உங்களுக்காக வாழ மாட்டார்கள்.


சூழ்நிலைகள் மாறிக் கொண்டிருக்கின்றன அதனால் நீங்கள் மாறிவிடுவதே சிறந்தது.

பணிச் சூழ்நிலைகள், பணித் தேவைகள் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பவை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டேதான் செல்கின்றன. உண்மைதான்.

நீங்கள் உங்கள் வேலையில் வெற்றியை நோக்கி நகர... நகர.. உங்கள் குடும்பத்துடன் நீங்கள் செலவிடும் நேரமும் குறைந்து கொண்டேதான் செல்லும்.

ஆனால், உங்கள் குடும்பத்துடன் நீங்கள் எத்தனை நேரம் செலவழிக்கிறீர்கள் என்பதைவிட, எப்படி செலவழிக்கிறீர்கள் என்பதே முக்கியம்.

## உங்கள் குடும்பத்துடன் எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்கள் என்பதைவிட, எப்படிச் செலவழிக்கிறீர்கள் என்பதே முக்கியம்...?



© Alamy

எங்களுடன் இத்தனை நேரம் ஏன் உட்கார்ந்து பேசுவதில்லை என்று அவர்கள் கேட்பதில்லை, அவரகளுடைய தேவையெல்லாம் "அவர்கள் மீது உங்கள் கவனம்".


அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்குதேவையான முக்கியத்துவத்தை நீங்கள் அளித்தால், நீங்கள் அவர்களுடன் ஒரு நிமிடம்கூட செலவழிக்கத தேவையில்லை. அவர்கள் உங்களுக்கு முக்கியமானவர்கள் என்பதை அவர்கள் உணருமாறு செய்யுங்கள்.

அவர்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதை அவர்கள் உணர்ந்தால், உங்களை அவர்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள் என்பதே நிஜம். யாருக்குத்தான் தன்மேல் அக்கறை இல்லாத ஒரு மனிதருக்காக வீட்டில் உட்கார்ந்து கொண்டு வெம்பப் பிடிக்கும். அவர்கள் தேவையெல்லாம், நீங்கள் அவர்களைப் புரிந்துகொள்வதே!

முயற்சி செய்து பாருங்கள், உறவுகள் சுவைக்கும்! (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மீண்டும் "புதிய சந்தேகத்தை" கிளப்பியிருக்கும் ராஜீவ் கொலை வழக்கு



"பேரறிவாளனின் வாக்குமூலத்தை அப்படியே நான் பதிவு செய்யவில்லை" என்று இந்தியாவின் அதிமுக்கியமான விசாரணை அமைப்பான சி.பி.ஐ.யின் எஸ்.பி. யாக இருந்த தியாகராஜன் அறிவித்திருக்கிறார். இது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பயங்கரமான திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மனித வெடிகுண்டை இயக்க பேட்டரி வாங்கிக் கொடுத்தார் பேரறிவாளன் என்பதுதான் சி.பி.ஐ. சுமத்திய குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில்தான் பேரறிவாளன் தண்டிக்கப்பட்டு, தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

இப்படி வழங்கப்பட்ட தூக்குத்தண்டனையை எதிர்த்து பேரறிவாளன் தாக்கல் செய்த கருணை மனு விவகாரம் இப்போது இந்திய சுப்ரீம் கோர்ட்டின் முன்பு நிலுவையில் இருக்கிறது. அரசியல் சாசன பெஞ்ச் அந்த வழக்கை விரைவில் விசாரிக்கப் போகிறது. தமிழகத்தில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் அல்லது ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தில் எதிரொலிக்கிறது. ஆங்காங்கே பொதுக்கூட்டங்கள் கூட்டி இந்த கோரிக்கை வலியுறுத்தப்படுகிறது. இந்த நிலையில் சி.பி.ஐ. எஸ்.பி.யின் பேட்டி பேரறிவாளன் உள்ளிட்டோரின் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தப் போகிறது.

இந்த விஷயத்தில் முக்கியமாக் கவனிக்க வேண்டியது "எதற்காக பேட்டரி வாங்கி வரச் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது" என்று பேரறிவாளன் சொன்னதை நான் அப்படியே பதிவு செய்யவில்லை என்று எஸ்.பி. கூறியிருப்பதுதான். இதன் அடிப்படையில் பார்த்தால், இந்தக் கொலைக்கு உதவ வேண்டும் என்ற நோக்கம் இல்லை என்று பேரறிவாளனின் வாக்குமூலம் உறுதி செய்திருக்கிறது. அந்த வாக்குமூலத்தில் உள்ள "எனக்குத் தெரியாது" என்ற வார்த்தையை மட்டும் விட்டுவிட்டு, பேரறிவாளனின் மற்ற வாக்குமூலத்தை பதிவு செய்தது ஏன் என்ற கேள்வி எழுவது நியாயம்தான். தியாகராஜன் எஸ்.பி.யின் பேட்டி ராஜீவ் கொலை வழக்கை 22 வருடங்களுக்குப் பிறகு திசை திருப்புகிறது.

ராஜீவ் கொலை வழக்கில் இந்த எஸ்.பி. மட்டுமல்ல. இதுவரை ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த பல அதிகாரிகளும் இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசி இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற விதம்மீது கடும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முதலில் இந்த வழக்கை விசாரித்த ரகோத்தமன் என்ற எஸ்.பி, ராஜீவ் கொலை வழக்கில் இந்திய உளவுத்துறையை சாடியிருந்தார். சில விஷயங்களை மேற்கொண்டு விசாரிக்கவில்லை என்று குற்றம் சாட்டியிருந்தார். இதற்காக ஒரு புத்தகமே தனியாக எழுதி அதை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார். அது போதாது என்று ராஜீவ் கொலையாளிகளின் தூக்குத்தண்டனையை உறுதி செய்த உச்ச நீதிமன்ற நீதிபதி தாமசும், "தவறு செய்து விட்டோம்" என்ற பாணியில் சில கருத்துக்களை வெளியிட்டார்.

இப்போது அந்த வழக்கை விசாரித்த இன்னொரு எஸ்.பி.யான தியாகராஜன் தான் ரிக்கார்டு பண்ணிய வாக்குமூலத்தை சரியாகச் செய்யவில்லை. வழக்கிற்கு தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டு, தான் குற்றவாளி அல்ல என்பதற்காகச் சொன்னவற்றை விட்டுவிட்டு வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று பட்டவர்த்தனமாக பேட்டியளித்துள்ளார். "வழக்கில் கிடைத்த அனைத்து ஆதாரங்கள் பற்றியும் விசாரிக்கப்படவில்லை", "குற்றவாளியின் வாக்குமூலம் திரித்து எழுதிக் கொள்ளப் பட்டது" என்ற இரு முக்கியமான விஷயங்களை சுதந்திரமான அமைப்பு என்று சொல்லப்படும் சி.பி.ஐ.யில் பணியாற்றிய இரு எஸ்.பி.க்கள் கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தூக்குத்தண்டனையை உறுதி செய்த உச்சநீதிமன்ற நீதிபதியே மாற்றுக் கருத்தை சொல்லிவிட்டார். ஒன்றல்ல, இரண்டல்ல- இந்த ராஜீவ் கொலை வழக்கு விவகாரத்தில் சி.பி.ஐ. அமைப்பு செய்த குழப்பங்கள் எண்ணற்றவை என்பதே ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக வெளிவந்துள்ள பல புத்தகங்கள், பல பேட்டிகள் வெளிப்படுத்தும் உண்மையாக இருக்கிறது. "தடா" "பொடா" போன்ற சட்டங்களில் பொலீஸ் அதிகாரிகள் பதிவு செய்துகொள்ளும் வாக்குமூலத்திற்கு ஒரு அங்கீகாரம் கொடுக்கப்படுகிறது.

பயங்கரவாத சட்டங்களின் கீழ பொலீஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த சிறப்பு பாதுகாப்பு வழக்குகள் போதிய சாட்சியங்களை சுட்டிக்காட்டி, நிரூபிக்க பேருதவியாக இருக்கின்றன. ஆனால், அப்படி பெறப்பட்ட வாக்குமூலத்தையே இவ்வளவு அஜாக்கிரதையாக ஒரு எஸ்.பி பதிவு செய்திருப்பார் என்றால், ராஜீவ் கொலை வழக்கில் பதிவு செய்யப்பட்ட பல வாக்குமூலங்களின் கதி என்ன? அந்த வாக்குமூலங்களை அடிப்படையாக வைத்து வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை பற்றி என்ன சொல்வது? இது எல்லாமே ராஜீவ் கொலையாளிகளுக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று எழுந்துள்ள கோரிக்கைகளுக்கு மேலும் வலுவூட்டுகின்றன. வெறும வாயைப் போட்டு மெல்லுவோருக்கு தியாக ராஜன் எஸ்.பி. போன்றோரின் பேட்டி அவலைப் போட்டு மெல்லுவது போன்ற வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது.

இந்திய அரசமைப்பில் சி.பி.ஐ. என்ற அமைப்பு சுதந்திரமானது. தன்னாட்சி அதிகாரத்துடன் செயற்படவேண்டிய அமைப்பு. ஆனால், காலப்போக்கில் இந்த அமைப்பின் சுதந்திரம் சிதைக்கப்பட்டுவிட்டது. மத்தியில் ஆட்சியில் இருப்போருக்கு முற்றிலும் "ஆமாம் சாமி" போடும் அமைப்பாக சி.பி.ஐ. மாறி விடுமோ என்ற அச்சம் அனைவருக்குமே ஏற்பட்டிருக் கிறது. சி.பி.ஐ. எஸ்.பி.க்கள் தாங்கள் விசாரித்த வழக்குகளின் தரம் பற்றி இப்படி அவ்வப்போது பேட்டிகள் கொடுப்பதும், புத்தகங்கள் எழுதுவதும் இதை வெளிப்படுத்துகின்றன.

இதனால்தானோ, என்னவோ பிரதமராக நரசிம்மராவ் இருந்த காலத்தில் ஒரு வழக்கில், "இனி பிரதமர் அலுவலகத்திலிருந்து எந்த உத்தரவும் பெறக்கூடாது" என்று இந்திய சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. அதுவும் இந்நிலைமையில் முன்னேற்றத்தைக் கொண்டு வரவில்லை. நிலக்கரி விவகார விசாரணையின்போது இந்திய சட்ட அமைசசரிடம் சென்று உத்தரவு பெற்ற சி.பி.ஐ. கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டிய வாக்குமூலத்தையே மாற்றியது என்ற குற்றச்சாட்டு கிளம்பியது. அதை முன்னிட்டு இந்திய சட்ட அமைச்சர் அஸ்வினிக்குமார் தன் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய சூழ்நிலை எழுந்தது.

-இணையம்- (தொடரும்)

# தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் சுதந்திர போராட்டமாக கருதப்பட வேண்டும்

## சிறிதரன் எம்.பியின் உரையால் கொதித்தெழுந்த அமைச்சர் எஸ்.பி.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பாராளுமன்றில் புகழாரம் சூட்டியுள்ளார்.

மாவீரர் தினத்தில் பிரபாகரன் மற்றும் உயிரிழந்த ஏனைய போராளிகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரபாகரனின் போராட்டம் நியாயமானது எனவும், அதில் தவறில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் ஓர் சுதந்திரப் போராட்டமாக கருதப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும், அவரது உரையின் முழுவடிவத்தையும் பாராளுமன்ற இணையத் தளத்திலிருந்து பிரசுரிக்கவில்லை என தெரிய வருகின்றது.

குறிப்பாக, தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் குறித்தும், மாவீரர்கள் குறித்தும் உரையாற்றிய சில பகுதிகள் ஹன்சாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை அரசியல் நோக்கில் தமிழ் மக்கள் ஒடுக்கப்படவில்லை. 109 வருடங்களின் பின்னர் ஜன நாயகத்தை அனுபவிக்கும் அவகாசத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தலைவர்களையும் வட பகுதி மக்களையும் கொலைசெய்த பிரபாகரனை சுதந்திர போராளி என்று விபரிக்க வேண்டாம். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதையே ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் விரும்புகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் இவ்வாறு கூறுவதன் மூலம் வடக்கில் இன்னமும் இராணுவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது ஏன? என்பதற்கு சரியான பதில் கிடைக்கும். தமிழ் தலைவர்களை கொலை செய்த ஒருவரை சிறிதரன் எம்.பி. தேசிய தலைவராக விபரிக்கிறார். இந்த நிலையில் வடக்கில் இராணுவத்தை இரட்டிப்பாக்க வேண்டும்.

வடக்கில் மீள்குடியேற்றமோ எதுவித அபிவிருத்தியோ இடம்பெறவில்லை என்று சிறிதரன் எம்.பி. வாய்கூசாமல் கூறுவதை ஏற்கமுடியாது.

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த மக்கள் எங்கே என அவர் கேள்வி எழுப்பினார். வெள்ளைக் கொடியுடன் வந்த மக்களை சுட்டுக்கொன்றது குறித்து பிரபாகரனிடமே கேட்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை 6 மாதங்களே இயங்கியது. மாகாண சபை முறையை பிரபாகரன் எதிர்த்தார். பிரேமதாஸ புலிகளுக்கு பணமும் ஆயுதமும் கொடுத்து போசித்தார்.

வட பகுதி தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கே வாக்களிப்பர் என்று தெரிந்திருந்தும் வட மாகாண சபைத் தேர்தலை நாம் நடத்தினோம். ஒரு கள்ள வாக்கேனும் இத்தேர்தலில் இடப்படவில்லை.

வட பகுதி மக்களின் நகை நட்டுக்களை பிரபாகரன் பறித்துச் செல்லவில்லையா? கப்பம் பெறவில்லையா? சிறுபிள்ளைகளை கடத்தி படையில் இணைக்கவில்லையா? இவரைத் தானா சுதந்திரத்திற்கான போராளி என்கிறார்கள்.

109 வருடங்களின் பின்னர் வட பகுதி மக்களுக்கு ஜனநாயகத்தை அனுபவிக்க ஜனாதிபதி சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்ததை மறந்து பேசாதீர்கள்.

பல்கலைக்கழக மாணவர்களை பிரபாகரன் கடத்திச் சென்று கொன்றுள்ளார். புலிகள் ஒழிக்கப்பட்டதன் மூலம் வட பகுதி மாணவர்களுக்கு நன்மை ஏற்படவில்லையா? இதற்கு இராணுவமே பங்களிப்பு செய்தது.

நாம் அனைவரும் இலங்கையர் என்பதை உணர்ந்து செயற்பட பழக வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழும் நிலை உருவாக்கப்படுவதையே நாம் விரும்புகிறோம். எனவே இனவாதத்தை தூண்ட வேண்டாமென கோருகிறேன்.

கிளிநொச்சியில் சிங்கள பாடசாலையொன்று முன்னர் இருந்தது. அங்கிருந்த சிங்கள மக்கள் மீளவும் கிளிநொச்சிக்கு செல்லவில்லை.

எனவே சர்வதேச சமூகத்துக்காக தவறான பிரசாரங்களை செய்யாதீர்கள்.

சனத்தொகை கணிப்பீட்டின் மூலம் வடக்கில் சனத்தொகை குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் பல்கலைக்கழக கோட்டாவும் குறைந்தது.

இன விகிதாசர அடிப்படையிலேயே பல்கலைக்கழக கோட்டா வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் வடக்கில் பாராளுமன்ற தெரிவும் குறைவடையும்.

அரசியல் நோக்கத்தில் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகதிற்கு தெரிவாவது குறைக்கப்படவில்லை. நாம் இனவாத ரீதியில் செயற்படுபவர்களாயின் யாழ். பல்கலைக்கழகத் தையோ கிழக்கு பல்கலைக்கழகத்தையோ முன்னேற்றியிருக்க மாட்டோம்.

பிரேமதாஸ, லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்க போன்ற தலைவர்களை புலிகள் கொன்றதைப் பற்றி அல்லாது அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், யோகேஸ்வரன் போன்ற தமிழ் தலைவர்களை கொன்றமை பற்றியே பேசுகிறோம் என்றார். (அ-2)




மல்லாகம்,தெல்லிப்பழை அரிமாக்கழகத்தின் புதிய நிர்வாக பதவியேற்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...

## சுகாதாரத்துறைக்கு 10 ஆயிரம் பேர் நியமனம்

(கொழும்பு)

சுகாதாரத்துறைக்கு மருத்துவர், தாதிமார் அடங்கலாக 10 ஆயிரம் பேரை நியமிக்க இருப்பதாகவும் டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்க உத்தியோகத்தர்களின் தொகை 14 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களுக்கு நேற்றுமுன் தினம் நியமனம் வழங்கப்பட்டது. 6 ஆயிரத்து 25 தாதிமார், ஆயிரத்து 700 உதவி மருத்துவ அதிகாரிகள் அடங்கலாக 10 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கவுள்ளோம். இசட் புள்ளி அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (அ-2)

## தங்கம் கடத்தப்படுவதை தடுக்க விசேட திட்டம் அமுலாகிறது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தங்கம் கடத்தப்படுவதையும் வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் தங்கம் கொண்டுவரப்படுவதையும் தடுப்பதற்கு விசேட திட்டங்களை அமுல்படுத்த இலங்கை சுங்கத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சுங்க திணைக்கள உயரதிகாரிகளின் விசேட கூட்டத்தில் இந்த விசேட திட்டங்களை அமுல் செய்யும் முடிவு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பயணிப்போர் அணிந்து செல்லத்தக்க தங்க நகைகளின் அளவில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படவுள்ளன.

வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்கள் அதிகபட்சமாக அணிந்து செல்லத்தக்க தங்க நகைகளின் அளவானது 15 பவுண்களுக்கும், ஆண்கள் அணிந்து செல்லத்தக்க தங்கத்தின் அளவானது 5 பவுண்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் குறித்த தங்க நகைகளை அணிந்த நிலையிலேயே குறித்த பயணி செல்ல வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. மீண்டும் நாட்டுக்குள் திரும்பி வரும் போதும் அதே அளவான தங்க நகைகளை குறித்த இலங்கையர் அணிந்திருக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்படடுள்ளதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

இந்த கட்டுப்பாடுகள் தொடர்பான விபரங்கள் விரைவில் பகிரங்கப்படுத்தப்படவுள்ளன.இக் கட்டுப்பாடுகள் இலங்கையர்கள் விடயத்தில் மட்டுமே அமுல் செய்யப்படும் என தெரிவித்தார்.

எவ்வாறாயினும் வெளிநாட்டவர்கள் தொடர்பிலும் விசேட திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. பயணிகள் வெளியேறும் போது கொண்டு செல்லும் தங்கம் குறித்து சுங்க அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவது அவசியம் என சுங்க பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

## தனியொரு குடும்பத்திற்காக இவ்வளவு பணச் செலவா?

### ரில்வின் சில்வா கேள்வி

(கொழும்பு)

தனியொரு குடும்பத்திற்காக பொதுமக்களின் பணத்தை அதிகளவில் வேறு எந்த அரசாங்கமும் செலவிடடதில்லை என ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக ஜே.வி. பி. ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டின் மூலம் நாட்டுக்கு கிடைத்த ஒரு பொருளாதார நன்மை இருந்தால் அதனை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

உழைக்கும் மக்கள், இளைஞர்கள், மாணவர்கள், சாதாரண பொது மக்கள் எவ்வித நன்மைகளையும் பெற்றுக்கொண்டதில்லை.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் நாட்டுக்கு நன்மை அளிக்கும் திட்டங்கள் எவையும் கிடையாது.

தலைவர் பதவியை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி பொது மக்களின் 108 கோடி ரூபா பணத்தை செலவிட்டுள்ளார்.

இந்த செலவிட்ட பணம் மக்களிடமிருந்து அறவீடு செய்யப்படவுள்ளது,

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையானது கடன் பெற்றுக் கொள்ளல் மற்றும் சூதாட்டத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)

## பொதுநலவாய மாநாட்டு செலவு மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது

### திஸ்ஸ எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் வரிகளை அதிகரித்து பொதுநலவாய மாநாட்டுக்கு செலவுசெய்த பணத்தை அறவிடும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அதற்கு விசேட வர்த்தக பொருட்கள் மீதான வரி என்ற பெயர் சூட்டப்பட்டு சூட்சுமமாக மக்களை நெருக்கடியில் தள்ளியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுநலவாய மாநாட்டுக்கென செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அரசாங்கம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பகிரங்கப்படுத்தவில்லை.

மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் பயணிப்பதற்காக 54 எஸ்.400 பென்ஸ் கார்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இக் கார்கள் அனைத்தும் ஏதோ ஒரு நிறுவனத்தால் தீர்வையற்ற முறையில் இங்கு கொண்டு வரப்பட்டன.

தீர்வையற்ற முறையில் இங்கு கொண்டுவருவதற்கு அரசாங்கம் தான் நடவடிக்கை எடுத்துள்ளது.

கார்கள் இறக்குமதி செய்யப்பட்டமை உட்பட பொதுநலவாய மாநாட்டுக்கு செலவு செய்யப்பட்ட அனைத்து செலவுகளையும் நிவர்த்தி செய்து கொள்வதற்காக விசேட வர்த்தகப்பொருட்கள் மீதான வரி என்ற பெயரில் ஆயிரத்து 288 கோடி ரூபாவை நாட்டு மக்களிடமிருந்து அறவிடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்றார். (அ-2)

# காங்கிரஸ் கட்சியின் மாற்றம்தான் ஈழத் தமிழர்களுக்கு நன்மைதரும்

(சென்னை)

இலங்கை பிரச்சினைக்கு தனி நாடுதான் நிரத்தரத் தீர்வு. காங்கிஸ் ஆட்சி மாற வேண்டும். விரைவில் அது மாறும். அப்போது இந்திய அரசு இலங்கையில் தமிழர்களின தனி நாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் என நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் 59 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாம் தமிழர் கட்சி இலங்கை தமிழர்களுக்காக தொடர்ந்து போராடி வருகிறது. இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாட்டு கேட்டு வலியுறுத்தி வருகிறோம். எங்கள் போராட்டம் ஆயுத போராட்டமாக இருக்காது.

அரசியல் போராட்டமாகத் தான் இருக்கும். இலங்கை தமிழர்களுக்கு தனிநாடு என்பதுதான் எங்களது குறிக்கோள். நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் நாங்கள் போட்டியிட மாட்டோம். ஆனால் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவோம். திராவிடர் கட்சிகளால் தமிழர்களுக்கு எந்தவித பயனும் இல்லை. வாக்குக்காகவே அவர்கள் அரசியல நடத்துகின்றனர்.

எங்களை முன்பு கேலி செய்தவர்கள் இப்போது தமிழர் பிரச்சினையை கையில் எடுத்துக் கொணடு அரசியல் நடத்துகின்றனர். இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள், இனப் படுகொலை போன்றவை இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இதனை பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன்தான் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இந்தியா செய்ய வேண்டிய வேலையை, பிரித்தானியா செய்துள்ளது. இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டதால் பொது நலவாய மாநாட்டை புறக்கணிக்கிறோம் என்று மொரீசியஸ் பிரதமர் அறிவித்தார். ஆனால் ,இந்திய பிரதமர் தான் பங்கேற்காததற்கான காரணத்தை சொல்லவில்லை.

இலங்கையில் தமிழர்களின் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவு பெருகி வருகிறது. இலங்கை பிரச்சினைக்கு தனிநாடுதான் நிரந்தரத் தீர்வு.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி மாறவேண்டும். விரைவில் அதுமாறும். அப்போது இந்திய அரசு இலங்கையில் தமிழர்களின் தனி நாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும்" என்று தெரிவித்தார். (அ-2)

# இலங்கை வங்கியின் சேவை நேரத்தை நீடியுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியிலுள்ள இலங்கை வங்கியின் விரிவாக்க கிளையின் சேவை நேரம் போதாதுள்ளதாக மருதங்கேணி பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் சமுர்த்தி அபிவிருத்தி வங்கியும் இலங்கை வங்கியுமே இயங்கும் நிலையிலுள்ளன.

இந்நிலையில் இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் கடற்றொழிலை மேற்கொள்வதனால் அவர்கள் தமது வேலைகளை முடித்து வங்கியின் சேவையை நாடுகின்ற நிலையில் வங்கி 12 மணியுடன் தமது சேவையை நிறுத்துவதனால் பாதிக்கப்படுகின்றனர். எனவே இப்பிரதேச மக்கள் வங்கிச் சேவையின் நேரத்தை அதி கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-64)

# ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர்

## ஜே.வி.பி.ஆலோசனை

ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சி சார்பற்ற பொதுவான வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டுமென ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ரணில் விக்ரமசிங்க, சோமவன்ச அமரசிங்க, கருஜயசூரிய, சஜித் பிரேமதாச ஆகிய எவரும் ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கு தகுதியற்றவர்கள்.

கட்சியொன்றின் சார்பான எவரும் நாட்டை ஆட்சி செய்யத் தகுதியானவர்கள் அல்லர்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்சி சார்பற்ற பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கான பணிகளை இப்போதிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

குறித்த வேட்பாளருக்கான ஆதரவு திரட்டும் நடவடிக்கைகள் விரைந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கல்வி நிறுவனங்களுக்கு புதிய அறிவுறுத்தல்கள்

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கு புதிய நடைமுறைகளை பிரதேச சபை அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகள் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறக்கூடாது.

அத்தோடு ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்குப் பின்னர் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் அதற்கு முன்னர் வகுப்புக்கள் நடத்தக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வகுப்புக்கள் நடைபெறும் ஏனைய நாட்களில் மாலை 6 மணியுடன் வகுப்புக்கள் நிறைவடையவேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் மாணவர்களின் ஆலய வழிபாட்டிற்காகவும் பாதுகாப்புக்காகவுமே எடுக்கப்பட்டுள்ளன.

இந்நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அனைத்து த்னியார் கல்வி நிறுவனங்களுக்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தீர்மானங்கள் கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்திலே எடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

## காதலனின் இரத்தமாதிரி பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு

புத்தூர் கிழக்கில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அவரது காதலனின் இரத்த மாதிரி பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி மேற்படி இடத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் மைதிலி (வயது 27) என்ற பெண் அவரது வீட்டிற்கு அருகிலுள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்ததார்.

சம்பவம் தொடர்பாக இம்மாதம் 7 ஆம் திகதி அவரது காதலனான ஏ.கிருஸ்ணதீபன் என்பவர் சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி சிறு குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் மேற்படி சந்தேக நபரை ஆஜர்படுத்திய வேளை அந் நபரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்க நீதவான் பஷீர் மொஹமட் உத்தரவிட்டார்.

இந்நிலையில் கடந்த 22 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபரின் இரத்த மாதிரியை பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்புமாறும் அவரை மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

நீதவானின் உத்தரவிற்கமைய மேற்படி நபருடைய இரத்த மாதிரி நேற்று முன்தினம கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அச்சுவேலி சிறு குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-4)

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பீட்சை 2013 - டிசெம்பர்

### நேர அட்டவணை

| | திகதி | முற்பகல் | | நேரம் | பிற்பகல் | | நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2013 டிசெம்பர் 10 செவ்வாய் | 11 பௌத்த சமயம்<br>12 சைவ நெறி<br>14 கத்தோலிக்க சமயம்<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம் | வினாத்தாள் I,II | 0830 - 1130 | | | |
| 2 | 2013 டிசெம்பர் 11 புதன் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | வினாத்தாள் I,II | 0830 - 1130 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ் மொழியும் இலக்கியமும் | வினாத்தாள் III | 1230 - 1430 |
| 3 | 2013 டிசெம்பர் 12 வியாழன் | 33 வரலாறு | வினாத்தாள் II | 0830 - 1130 | 33 வரலாறு | வினாத்தாள் I | 1230 - 1330 |
| 4 | 2013 டிசெம்பர் 13 வெள்ளி | 80 தகவல் தொடர்பாடலும் தொழினுட்பவியலும்<br>81 விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும்<br>82 கடற்றொழிலும் உணவுத் தொழினுட்பவியலும்<br>83 ஆக்கத்திறனும் தொழினுட்பவியலும்<br>84 நுண்கலை<br>85 மனைப்பொருளியல்<br>86 சுகாதாரமும் உடற்கல்வியும்<br>87 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்<br>92 மின் ஆவணப்படுத்தலும் கருக்கெழுத்தும் (சிங்களம்)<br>93 மின் ஆவணப்படுத்தலும் கருக்கெழுத்தும் (தமிழ்)<br>94 மின் ஆவணப்படுத்தலும் கருக்கெழுத்தும் (ஆங்கிலம்) | வினாத்தாள் I,II | 0830 - 1130 | | | |
| 5 | 2013 டிசெம்பர் 14 சனி | 34 விஞ்ஞானம் | வினாத்தாள் II | 0830 - 1130 | 34 விஞ்ஞானம் | வினாத்தாள் I | 1230 - 1330 |
| 6 | 2013 டிசெம்பர் 17 செவ்வாய் | 32 கணிதம் | வினாத்தாள் I | 0830 - 1030 | 32 கணிதம் | வினாத்தாள் II | 1230 - 1500 |
| 7 | 2013 டிசெம்பர் 18 புதன் | 40 சங்கீதம் (கீழைத்தேயம்)<br>41 சங்கீதம் (மேலைத்தேயம்)<br>42 சங்கீதம் (கர்நாடகம்)<br>44 நடனம் (சுதேச)<br>45 நடனம் (பரதம்) | வினாத்தாள் I,II | 0830 - 1130 | 46 இலக்கிய நயம் ஆங்கிலம்<br>47 இலக்கிய நயம் சிங்களம்<br>48 இலக்கிய நயம் தமிழ்<br>49 இலக்கிய நயம் அரபு<br>50 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) வினாத்தாள் I,II<br>51 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) வினாத்தாள் I,II<br>52 நாடகமும் அரங்கியலும்(ஆங்கிலம்) வினாத்தாள் I,II | | 1230 - 1530 |
| | | 43 சித்திரம் | வினாத்தாள் I<br>வினாத்தாள் III | 0830 - 0930<br>0945 - 1145 | 43 சித்திரம் | வினாத்தாள் II | 1315 - 1515 |
| 8 | 2013 டிசெம்பர் 19 வியாழன் | 31 ஆங்கில மொழி | வினாத்தாள் I<br>வினாத்தாள் II | 0830 - 0930<br>0945 - 1145 | | | |
| 9 | 2013 டிசெம்பர் 20 வெள்ளி | 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்<br>61 புவியியல்<br>62 குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம்<br>63 முயற்சியாண்மைக் கற்கை<br>64 இரண்டாம் மொழி (சிங்களம்)<br>65 இரண்டாம் மொழி (தமிழ்)<br>66 பாளி<br>67 சமஸ்கிருதம்<br>68 பிரெஞ்சு<br>69 ஜேர்மன்<br>70 ஹிந்தி<br>71 ஜப்பான்<br>72 அரபு | வினாத்தாள் I,II | 0830 - 1130 | | | |

# அடங்கும் மாநாட்டு ஆரவாரங்களும் கிளம்பும் பாதீட்டு நெருக்கடிகளும்...!

ஓராயிரம் யானையைக் கொன்றால் பரணி. ஆதலால் யுத்தம் இருக்கு கவனி... என்கிற பாடல் நா. முத்துக்குமாரால் பாலாவின் நந்தா திரைப்படத்திற்காக எழுதப்பட்டது. இது ஒடுக்கப்படுவோரின் இன்னுமொரு போர்க்களத்திற்கான பாதையைக் காட்டுவது போலுள்ளது.

11 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட பாட்டாயினும், முள்ளிவாய்க்கால் பேரழிவு முடிவுற்று நான்கு வருடங்கள் கழிந்தும், வலி. வடக்கில் கூடும் மக்களும், நீதி கோரும் காணாமற் போகடிக்கப்பட்ட மக்களின் உறவுகளும், அதனை உயிர்ப்புள்ள கவிதையாக இன்றும் நிறுத்தி வைத்துள்ளார்கள்.



ஒரு விடயம் மட்டும் ஊடக இரும்புத் திரைகளை வெள்ளை வான்களின் உறுமல்களையும் தாண்டித் தெரிகிறது. அது வேறொன்றுமில்லை. சுயாதீன சர்வதேச விசாரணைய்ய வேண்டி நிற்கும் தமிழ் மக்களின் குரல்தான் அது.

அதை எப்படி உறுதியாகச் சொல்ல முடியும் என்கிறீர்களா? சர்வதேச நாடுகளின் தலைவர்களும் ஐ.நா சபையின் உயர் மட்டத் தலைவர்களும் தமிழர் தாயக பகுதிகளில் காலடி வைக்கும்போது காணாமற்போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு இவர்களிடமே அந்த மக்கள் திரண்டு சென்று முறையிடுகின்றார்கள்.

ஒடுக்கப்படும் தமிழினம் வேண்டுவது, சர்வதேச விசாரணை என்பதைத் தவிர, வேறொன்றுமில்லை என்பதை உணர்த்த இது ஒன்றே போதுமானது.

அதேவேளை, பாதிப்புற்ற பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் வலிகளையும் துயரங்களையும் கொச்சைப்படுத்தும் வகையில் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் வழங்கிய நேர்காணலை, இந்த ஆண்டின் மிகக் கொடுமையான விடயமாகப் பார்க்க வேண்டும்.

அத்தோடு உலகிலுள்ள கிரிக்கெட் ஆதரவாளர்களை தனது நட்சத்திர அந்தஸ்து போர்வையூடாக, ஆட்சியாளர்களுக்கு சார்பாக மாற்றும் அவரது முயற்சியாயை, விளையாட்டையும் அரசியலையும் கலக்கக் கூடாதென்று அடம்பிடிக்கும் தீவிரவாதிகளின் சிந் தனைக்கு விடப்படும் சவாலாகக் கருதவேண்டும்.

முரளியின் அதிகாரவாசிகள் சார்பான அரசியல் கருத்தினை, மிகவும் காட்டமான வகையில் கண்டித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன். காணாது போகடிக்கப்பட்ட மக்களின் சார்பாக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்தவாறு பல போராட்டங்களை முன்னெடுக்கும் மனோகணேசனுக்கு இந்த மக்களின் துயரமும் சீற்றமும் நன்கு புரியும்.

சனல் 4 வெளியிட்ட இன அழிப்பு ஆவணங்கள் போலியானவையென்று இதுவரை எவராலும் நிரூபிக்கப்படவில்லை. சர்வதேச சுயாதீன விசாரணையொன்று நிகழ்த்தப்பட்டால் அதன் உண்மைத்தன்மை உலகிற்கு வெளிச்சமாகும். அதைவிடுத்து எந்த அறிவியல் உண்மையின் அடிப்படையில் சனல் 4 காணொலிகள் பொய்யென்று சுழல் பந்து வீச்சாளரால் சொல்ல முடிகின்றது?

வேறொரு கோணத்தில் இதனை அரசியல் பிரவேசம் ஒன்றிற்கான முன்னோட்டமாகவும் பார்க்கலாம். ஆனால், புகழின் உச்சாணிக் கொம்பில் அமர்ந்திருக்கும் எவரும் மக்களின் உணர்வோடும் வாழ்வோடும் விளையாட முற்படின் ஒரு சிறு கணத்தில் மக்கள் நெஞ்சங்களிலிருந்து அகற்றப்படும் சோகமும் நடக்கும், கரகோஷம் செய்ய ஆட்கள் இருக்க மாட்டார்கள்.

பொதுநலவாய மாநாடு நடைபெற்ற வேளையில்தான் இந்த சுழல்பந்து வீச்சால் ஈழத் தமிழினம் ஆவேசப்பட்டது. ஆனால், ஆட்சியாளர் எதிர் பார்த்தது போல எந்த விக்கெட்டையும் முரளிதரனால் வீழ்த்த முடியவில்லை.

மழைபோல் பொழிந்த எறிகணைகளை சந்தித்த மக்களுக்கு இவ்வாறான சிறு சுழல்பந்து வீச்செல்லாம் ஒரு பொருட்டேயல்ல.

• இருப்பினும் வர்த்தகக் குழுவோடு இலங்கைக்கு வருகை தந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன, 2015 மே இல் நிறைவடையும் பதவிக்காலத்தை மனதில் நிறுத்தி சில காட்டமான கேள்விகளை எழுப்ப மறக்கவில்லை.

சுயாதீன விசாரணையை இலங்கை அரசு நடத்தாவிட்டால் வருகிற மார்ச்சில் நவநீதம்பிள்ளை அம்மையார் கொண்டு வரும் சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றுக்கான பிரேரணையை ஆதரிப்போம் என்று கெமரூன் போட்ட வெடியால் அரசு அதிர்ந்தது. அதை முழுவதுமாக நம்பி சில ஈழத் தமிழ் அமைப்புக்களும் ஊடகங்களும் கொண்டாட தொடங்கிவிட்டன. இவைதவிர, பிரித்தானிய பிரதமரைப் பாராட்டி கலைஞர் கருணாநிதியும் எழுதுவிட்டார்.

ஆனால், பூனைக்கு ஐ.நா மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரே மணி கட்டட்டும் என்கிற வகையில் பிரித்தானிய பிரதமர் தெரிவித்த கருத்துத்தான் பூகோள அரசியலில் இந்த வல்லரசாளர்கள் போடும் இரட்டை வேடங்களையும் தற்காப்பு நிலைகளையும் புரிய வைக்கிறது.

ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்திற்கு உண்மையாகவே உதவி செய்ய விரும்பினால், பாதுகாப்புச் சபையில் பிரித்தானிய அரசே இந்த தீர்மானத்த்தை முன்வைக்கலாம்.

வடக்கில் கால் பதிக்கும் வல்லரசுத் தலைவர்கள் அனைவரும் தற்காலிக ஆற்றுப்படுத் தலைத்தான் இங்கு வாழும் மக்களுக்கு அளிக்கின்றார்கள்.

ரணங்களின் மீது ஒரு மெல்லிய காற்று வருடிச் செல்கிறது. கணநேர மகிழ்வு. அடுத்த கணத்தில் தலைகீழாக புரட்டிப் போடப்படுகிறது.

சற்று இளைப்பாறிய வெள்ளை வாகனங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கிவிடுகின்றன. காணாமற் போதல் என்கிற இயல்பு வாழ்வு மறுபடியும் ஒட்டிக் கொள்கிறது.

ஏதோவொரு மூலையில் அரசியல் பேசாது அபிவிருத்தி பற்றி பேசிக் கொண்டு மாகாணசபைகளும் அசைந்து கொண்டிருக்கின்றன அணுக்களைப் போல.

வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவரும் மாநாட்டு ஆரவாரங்கள் முடிவடைந்ததும், வரவு செலவுத் திட்டத்திற்கான பெருவிழா ஆரம்பமாகிவிட்டது.

மாநாட்டிற்கு வருகை தந்த பொதுநலவாய நாடுகளின் விழுமியங்களைக் காப்பாற்ற திடசங்கற்பம் பூண்டுள்ள இரட்சகர்கள் எவருமே, பாதுகாப்பு அமைச்சுக்கு இத்தனை கோடி பணத்தை ஏன் ஒதுக்கீடு செய்கிறீர்கள் என்று கேட்கவில்லை.

மனித உரிமை மீறல்களைத் தட்டிக்கேட்போம், அதட்டிக் கேட்போம் என்று சொன்னவர்கள், வர்த்தகக் குழுவோடுதான் இலங்கை சென்றார்கள்.

அதேவேளை, இவ்வரவு செலவுத் திட்டமானது கிராமிய பொருளாதாரத்தை இலக்கு வைத்து உருவாக்கப்பட்டுள்ளதாக தலைநகர பொருளியல் நிபுணர்கள் விளக்கமளிக்கின்றார்கள்.

பாதுகாப்புத் துறையோடு நகர அபிவிருத்தி அமைச்சகம் சேர்ந்திருப்பதால் ஒதுக்கப்படும் பெரிய தொகை பாதுகாப்பு அமைச்சுக்கு மட்டுமானதல்ல என்கிற வியாக்கியானத்தை அரசு கூறும் என்கிறார்கள்.

இருப்பினும் பொதுநலவாய மாநாடு பெரியளவில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டு வரவில்லை என்கிற செய்தியும் வருகின்றது. வரவு செலவுத் திட்ட குறைநிரப்ப, தேசிய சேமிப்பு வங்கியூடாக மீண்டும் ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான முறிகளை விற்பதற்கு அரசு தயாராகலாம் என்று வேடிக்கையாகச் சொல்லப்படுகிறது.

சீனாவிடம் வாங்கிய கடனுக்கான வட்டிப்பணத்தைச் செலுத்துவதற்கு, மேன் மேலும் கடன் வாங்கும் தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குள் அரசு தள்ளப்படுகிறது.

கடனை அடைக்க கடன் வாங்கும் நாட்டில் ஏராளமான பொருளியல் நிபுணர்கள்.

-இதயச்சந்திரன்-

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
2. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
3. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள் புள்ளடியை (X) இடுக.

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

## தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி (I)

1. முல்லைச் சிரிப்பாலே எனது மூர்க்கம் தவிர்த்திடுவாய்.மூர்க்கம் என்பதன் பொருள்
   1. இன்பம் 2. துன்பம் 3. சினம் 4. மகிழ்ச்சி

2.அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் உற்றுழித் தீர்வார் உறவல்லர்.இங்கு உற்றுழி என்பதன் பொருள்
   1.விலகிச் செல்லல் 2. துன்பமான காலம்
   3.சேர்ந்து வாழல் 4.துன்பத்தை அனுபவித்தல்

3.குடிபுறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் வடு அன்று. குற்றம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
   1. குறைவு 2.குணம் 3. துணிவு 4. நிறைவு

4.அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும்.தூற்றும் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1.காக்கும் 2.பழிக்கும் 3.நீக்கும் 4.போற்றும்

5.மல்லல் மறுகில் மடநாகு உடனாகச் செல்லும் மழவிடை நாகு என்பதன் அஃறிணை ஆன்பாற்சொல்
   1.கடுவன் 2.கலை 3.களிறு 4.நாம்பன்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. முதுமைக் காலத் தேவ்வகளுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்
   1. ஆவணம் 2.ஓம்படை 3.ஏய்ப்பில்வைப்பு 4. ஆதனம்

7.இக்காலத்தில் நல்ல ஒரு தொழிலைப் பெறுவதற்கு றெக்கமென்டேசன் (RECOMMENDATION) அவசியம் றெக்கமென்டேசன் என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச் சொல
   1. நேர்முகம் 2.பரிந்துரை 3.திறனாய்வு 4.ஆர்வம்

8.கலம் என்ற சொல் தரும் பொருள் அல்லாதது
   1. ஆபரணம் 2. சங்கு 3.கப்பல் 4.பாத்திரம்

9. வறுமையின் கொடுமையைப் புலப்படுத்தும் அறஞ்சொற்றொடர்
   1. அணிவன அணிந்து புனைவன புனைந்து
   2.ஏழை எளியவர் வாயிலடியாமல்
   3.ஆடையின்றி வாடையில் மெலிந்து
   4. ஓடும் செம்பொன்னும் ஓக்கவே நோக்கும்.

10. கல்வி செல்வம் என்பன
   1. இருநிதி 2.இருபற்று 3.இருமரபு 4.இருபொருள்

11.பலா, தோடை முதலிய பழங்களின் உள்ளீட்டைக் குறிக்கும் மரபுச் சொல்
   1.சுளை 2. சதை 3.மணி 4.பருப்பு

12 பனையின் இளங்காய் நுங்கு எனப்படும் தென்னையின் இளங்காய்
   1.வடு 2.கச்சல் 3.குரும்பை 4.மூசு

13.புகையிலையின் கூட்டம் சிப்பம் ஆகும். வைக்கோலின் கூட்டம்
   1.குவியல் 2.கற்றை 3.கொத்த 4.கோவை

14. குட்டி என்பதை இளமைப் பெயராகக் கொண்டவை
   1. மீன், கீரி 2. கோழி, குருவி 3.தவளை, அணில் 4.முயல், பூனை

15.ஐயையோ ஆனையொன்று வருகிறதே இத்தொடரில் ஐயையோ என்பது உணர்த்தும் பொருள்
   1.இரக்கம் 2. வியப்பு 3.இகழ்ச்சி 4.அச்சம்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16.சாதுபோல் நடித்துத் தீது புரியும் ஒருவனைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான மரபுத் தொடர்
   1. அண்டப்புரட்டன் 2.தொழுகள்வன்
   3. அரைமனிதன் 4.அவசரக்குடுக்கை

17பின்பற்றுதல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்
   1.அடியிடுதல் 2.அடிகோலுதல்
   3.அடியொற்றுதல் 4.அடிப்படுத்தல்

18.முன்னைய அனுபவம் ஆபத்து வராமற் காத்து உதவும் என்ற பொருள் தரும் பழமொழி
   1. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்
   2. அடாது செய்தவர் படாது படுவர்
   3. விளையும் பயிரை முளையிலே தெரியும்
   4. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது

19.ஒருவரிடம் உள்ளீடான அறிவுச் செல்வம் இல்லாவிட்டால் அவர் பேச்சில் பயனுள்ள கருத்து வெளிப்படமாட்டாது என்ற கருத்து தரும் பழமொழி
   1.அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
   2.பானையில் இருந்தாற்தானே அகப்பையில் வரும்
   3.ஆடத் தெரியாதவள் கூடக் கோணலென்றாளாம்
   4.மந்திரம் அறியாதவன் பூசை விடிய விடிய

20.துன்பத்தின் மேல் துன்பம் வருவதால் எமது உள்ளம் பண்பட்டுத் தூய்மை அடையும் என்ற பொருள் தரும் உவமைத்தொடர்
   1. சுடச் சுட ஒளிரும் பொன்போல
   2.பெருங் காற்றில் அகப்பட்ட துரும்பு போல
   3.தரித்திரக்காரனுக்குப் புதையல் கிடைத்தது போல
   4.வாடும் பயிருக்கு வான்மழை போல

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21.பின்வருவனவற்றுள் ஏழுவாய் வெளிப்பட்டுத் தோன்றும் வாக்கியம்
   1.அக்கம்பக்கம் பார்த்துப் பேசு 2.பணம் பாதாளம் மட்டும்பாயும்
   3.உப்பிட்டவரை உள்ளளவும் நினை 4.பட்டகாலிலே படும்

22.நான்காம் வேற்றுமைக்கு பொருத்தமான உதாரணம்
   1.மகனுடன் வந்தார் 2.சினத்தை அடக்கினார்
   3.பரிசுக்காகப் பாடினார் 4.வெண்கட்டியால் எழுதினார்

23.திருத்தினார் என்ற பதத்தின் பகுதியாய் அமைவது
   1.திரு 2.திருத்து 3.திருந்து 4.திருத்தி

24.சொற் புணர்ச்சியில் வல்லினம் மிகுதலுக்கு ஓர் உதாரணம்.
   1.கடற்கரை 2.மாங்கனி
   3.அருட்செல்வம் 4.தமிழ்ச்சங்கம்

25.இன்சொல் இனிமை தரும் இன்சொல் என்பது
   1. வேற்றுமைத்தொகை 2.பண்புத்தொகை
   3.உவமைத்தொகை 4.அண்மொழித்தொகை

26.பிறர் அறியாதவாறு ஒரு கூட்டத்தாருள் வழங்கி வரும் குறிப்புச் சொல்
   1. இடக்கரடக்கல் 2. இலக்கணப்போலி
   3. குழூஉக்குறி 4. மரூஉ

27. அவன் வற்றலும் துவையலும் உண்டான். இங்கு வற்றல் துவையல் என்பன.
   1. பொருளாகுபெயர் 2.தொழிலாகு பெயர்
   3.குணவாகுபெயர் 4.சினையாகுபெயர்

28.பின்வருவனற்றுள் கூட்டுப் பெயர் அல்லாதது
   1. உயர்ச்சி 2.எறிகல் 3.பறிமுதல் 4.நீரேரி

29.கண்ணன் கானமழை பொழிகின்றான். இங்கு கானமழை என்பது
   1. தற்குறிப்பேற்ற அணி 2.உவமை அணி
   3.உயர்வு நவிர்ச்சி அணி 4.உருவக அணி

30.ஆசிரியரால் நூல் எழுதப்பட்டது. இவ்வாக்கியத்தில் எழுதப்பட்டது என்பது
   1.செய்வினை 2.செயற்பாட்டு வினை
   3.பிறவினை 4.எதிர்மறைவினை

பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க

31.சொற்களைக் கருத்தின்றியும் ஒழுங்கின்றியும் உபயோகித்தால் பயன்தரக்கூடிய சிந்தனை தோன்றாது. பிறர் விளங்கிக் கொள்ளக் கூடிய கருத்து வெளிப்பாடாக இருக்க வேண்டுமானால் மொழிப் பிரயோகத்தில் ஒழுங்கும் தெளிவும் இருத்தல் வேண்டும்.
   1.பயன்தரக் கூடிய சிந்தனைக்கு கருத்து வெளிப்பாடு மட்டும் போதாது
   2.மொழிப் பிரயோகமானது ஒழுங்கும் தெளிவும் உடையதாக இருந்தால் தான் அதனைப் பிறரால் விளங்கிக் கொள்ள முடியும்.
   3.சிந்தனை தோன்றுவதற்குச் சொற்களைக் கருத்தின்றியும் ஒழுங்கின்றியும் உபயோகிக்க வேண்டும்.
   4.பிறர் விளங்கிக் கொள்ளக் கூடிய வெளிப்பாட்டுக்குச் சிந்தனை அவசியம்

32.நேரத்தை தம்வசப்படுத்த முடியுமா என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அது நிச்சயம் முடியும் அதற்காக உருவாக்கப்பட்டதே நேரமுகாமைத்துவம். அதாவது நேரத்தை வீணடிக்காது சரியாக கையாளுதலாகும்.
   1.நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துதல் நேரமுகாமைத்துவம் ஆகும்.
   2.நேரத்தை வசப்படுத்துவது கடினமான காரியம்
   3.நேரமுகாமைத்துவத்தால் நேரம் வீணடிக்கப்படுகின்றது.
   4.நேரத்தை வீணடிப்பதே அனைவரதும் ஆசையாகும்.

பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

33.சுயநலமும் தற்பெருமையும்
   1.நன்மை பயப்பனவன்று 2.நன்மை பயப்பனவல்ல
   3.நன்மை பயப்பதன்று 4.நன்மை பயப்பதல்ல

34.சாரணர்குழு மக்களோடு சேர்ந்து
   1.சிரமதானப் பணியில் ஈடுபட்டனர் 2.சிரமதானப் பணியில் ஈடுபட்டது
   3.சிரமதானப் பணியில் ஈடுபட்டார்கள் 4.சிரமதானப் பணியில் ஈடுபட்டன

35.நாம் முயற்சி செய்தாலன்றி
   1.நற்பழக்கங்கள் வளரும் 2.நற்பழக்கங்கள் வளராது
   3.நற்பழக்கங்கள் வளரா 4.நற்பழக்கங்கள் வளர்கின்றன

பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.

36. 1.ஆலயந் தொழுவது சாலவும் நன்று
   2.அகந்தை கொண்டோர் நிச்சயம் அழிவர்
   3.தொட்டிற் பளக்கம் சுடுகாடு மட்டும்
   4.மருந்தேயாயினும்விருந்தோடுண்

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

37.ஒரு வழக்கின் எதிர் வழக்காளி..................... என அழைக்கப்படுவர்
   1. பிரதிவாதி 2.நியாயவாதி 3.மனுதாரி 4.சட்டத்தரணி

38.நூலாசிரியர் தாம் இயற்றிய நூலை இறந்த தன் தந்தையின் நினைவாக அவருக்கே...................... செய்துள்ளார்.
1.தியாகம் 2.சமர்ப்பணம் 3.சன்மானம் 4.பிரதியுபகாரம்

39.தருணத்திற்குத் தக்கவாறு தன் கொள்கையை மாற்றிக் கொள்பவன்
   1.யதார்த்தவாதி 2.சுயநலவாதி
   3.சந்தர்ப்பவாதி 4.அபேதவாதி

40.கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ.இப்பழமொழிகளை யார் எப்பொழுது இயற்றினார் என்று சொல்ல முடியாது
ஆ.அவை அவ்வப்போதைய தேவைகளை உடனுக்குடன்பூர்த்திசெய்துவிட்டு மறைந்துபோகின்றன.
இ. இங்ஙனம் மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படுவன பழமொழிகள் எனப்படும்.
ஈ.நாம் நாள்தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வப்போது எம்மால் அமைக்கப்படுவன.
உ.எனினும் சிற்சில வாக்கியங்கள் பொருட்சிறப்பு மிக்கனவாய்ப் பிறந்து மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும் தகுதியை பெற்று விடுகின்றன.
   1.ஈ, உ, ஆ, இ, அ 2.இ, அ, ஈ, ஆ, உ
   3.அ, இ, உ, ஆ, ஈ 4. ஈ, ஆ, உ, இ, அ

(தொடரும்)

# பல்வேறு தேவைகளுடன் இயங்கும் புதுக்குடியிருப்பு பிரதேசசபை

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசசபை பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடனும் குறைந்தளவு ஆளணியுடனும் இயங்கிவருவதோடு இந்தப் புதுக்குடியிருப்பு பிரதேசசபை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிரதேசசபைகளில் மிகப் பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கியதுடன் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.**

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் முடிவு இடமாகவும் பாரிய அழிவுகளை எதிர்நோக்கிய பிரதேசமாகவும் இப்பகுதி காணப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இப்பிரதேச சபைக்கான தேர்தல் நடைபெறாது. இன்னமும் பிரதேச சபை செயலாளரின் மேற்பார்வையின் கீழேயே இச்சபை உள்ளது.

இச்சபையில் காணப்படும் வளப்பற்றாக் குறை மற்றும் ஆளணிப் பற்றாக்குறைகளை தனது சபைக்குட்பட்ட பல பகுதிகளில் வேலைகளைத் தொடர்ந்தும் செயற்படுத்த முடியாது திணறுகின்றது.

இதனது உப அலுவலகமான ஒலுமடு அலுவலகத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள நிலையில் திருமுறிகண்டியில் தற்போது இயங்கும் இந்த உப அலுவலகத்துக்கு இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது.

இச்சபையில் பல நிலைகளில் 71 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளபோதிலும் தற்போது 27 உத்தியோகத்தர்களே இங்கு கடமையிலுள்ளனர்.

மிக அவசியமான ஆயுள்வேத மருத்துவர்கள் இருவர் தேவையான நிலையில் ஒருவர் மட்டுமே கடமையில் உள்ளார். அத்தோடு 8 பேர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேவைப்படுகையில் 4 பேர் மட்டுமே கடமையிலுள்ளனர்.

இதேபோன்று தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூவர் தேவையாகவுள்ள நிலையில் ஒருவரே பணியாற்றுகின்றார்.

இதேவேளை வருமான வரி பரிசோதகர்கள் மூவர் தேவையானவிடத்து ஒருவர் மட்டுமே கடமையாற்றுகின்றார்.

இவர்களை விடவும் இரண்டாந்தர நிலைகளில் உள்ள உத்தியோகத்தர்களில் சந்தை மேற்பார்வைக்கெனவும் சுகாதார மேற்பார்வைக்கெனவும் இருவர் தேவைப்படுமிடத்து ஒருவர் கூட இங்கு கடமையிலில்லை. மேலும் சாரதிகள் 4பேர் தேவைப்படுகையில் இங்கு ஒருவர் மட்டுமே கடமையிலுள்ளார்.

இதேவேளை ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்கள் 2 பேர் தேவையாகவுள்ள நிலையில் ஒருவர்கூட இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

காரியாலய காரியசகாயர் ஒருவர் மட்டுமே கடமையாற்றுகின்றார். ஆனால் இதற்கு மூவர் தேவைப்படுகின்றனர். நூலகப் பரிசாரகர்கள் மூவர் தேவையான நிலையில் ஒருவர் கூட கடமையிலில்லை.

சுகாதாரப் பணியாளர்கள் 20பேர் தேவையாகவுள்ளனர். ஆனால் 8 பேர் மட்டுமே கடமையிலுள்ளனர்.

இவர்களுடன் தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வெளிக்கள உத்தியோகத்தர் பணிக்கு 10 பேர் தேவையாகவுள்ளனர். ஆனால் இதுவரை ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை.

மேற்படி இரண்டாந்தர நிலை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்பும் நோக்குடன் அண்மையில் இவற்றை நிரப்புவதற்குரிய அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை முன்னெடுப்பதாகக் கூறுபவர்கள் இறுதிப்போர் காரணமாக சிதைந்து காணப்படும் இப்பிரதேச சபையின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வார்களாயின் அதனூடாக இப்பகுதி மக்களின் வாழ்வெழுச்சிக்கு வழி சமைக்கக்கூடியதாக இருக்குமென மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம-15)




# வவு.இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட வயற்காணிகள் மீள கையளிக்க நடவடிக்கை

## வடமாகாண சுகாதார அமைச்சர்

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் உஞ்சாற்கட்டி கிராமத்தில் இராணுவத்தால் கையகப்படுத்தபட்ட வயற்காணிகளை மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதரர அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உஞ்சாற்கட்டி கிராம விவசாயிகள் மேற்படி தமது காணிகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளதை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து அமைச்சரும் ஏனைய வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், தியாகராசா மற்றும் இந்திரராஜா ஆகியோருடன் குறிப்பட்ட பிரதேசத்திற்கு சென்று அப்பகுதிக்கு பொறுப்பான இராணுவ உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து காணிகளை காணிச் சொந்தக்காரர்களுக்கு மீள கையளிக்க இராணுவம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, உஞ்சாற்கட்டி பழமைவாய்ந்த கிராமமாகும். இது நெடுங்கேணியிலிருந்து பல மைல் தூரத்தில் அமைந்துள்ள ஓர் எல்லைக்கிராமமாகும்.

1883 காலப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்பகுதியிலிருந்து மக்கள் வெளியேறி வேறு இடங்களில் வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் 2009 யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் இப்பகுதியிலுள்ள இவர்களது பூர்வீக காணிகள் இராணுவத்தால் கையகப் படுத்தப்பட்டு நெற் செய்கைக்காக தயாரபடுத்தப்பட்டிருந்ததை விவசாயிகள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அமைச்சர் உட்பட ஏனைய மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், விவசாயிகள் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்று அமைச்சர் , உயர் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடி யதை தொடர்ந்து இராணுவம் பிரதேச செய லாளரால் காணிச்சொந்தக்காரர்கள் உறுதிப் படுத்துமிடத்து தாங்கள் காணிகளை விவசாயிகளுக்கு மீள கையளிப்பதாக அமைச்சரிடம் உறுதி வழங்கியுள்ளார்கள். (ம-250)

# இன்னல் நிறைந்த வாழ்வுடன் விவேகானந்தநகர் கிராமமக்கள்


கிளிநொச்சி மாவட்ட விவேகானந்த நகர் கிராமமக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் புகையிரத வீதி அமைக்கப் பட்டுள்ளமையால் குறுக்குவீதிகள் ஊடாக தமது கிராமங்களுக்குச் சென்று வந்த மக்கள் அந்த வீதிகளை தற்போது பயன்படுத்தமுடியாது பாரதிபுரம் கிராமத்தின் வீதியையே பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போது பயன்படுத்துகின்ற இவ் உள்வீதிகள் அனைத்துமே பழுதடைந்த நிலையில் உள்ளதால் பாடசாலை மாணவர்களும் பயணிகளும் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

500 குடும்பங்களுக்கு மேல் வாழும் இந்தக் கிராமத்தில் குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களுக்கு முழுமையாக இந்த மின்சாரவசதியும் கிடைக்கவில்லை. எனவே துறைசார்ந்தவர்கள் இதில் கவனம் எடுத்து தமது கிராமத்திற்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-254)



கிளி/பளை மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதனையும் 2012 ஆம் ஆண்டு அகில இலங்கையில் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமாணவி கே. திவாரகாவிற்கு பிரதம விருந்தினரின் பாரியார் திருவாட்டி குயின் ஜெஸீலி கலாமணி பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

## ராஜீவ்காந்தி கொலை வழக்கு

# சுப்பிரமணியன்சாமியை கைதுசெய்யக் கோரிக்கை

(சென்னை)

**இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழங்கில் சுப்பிரமணியன்சாமியைக் கைது செய்து விசாரிக்க வேண்டும் என தமிழர்களம் அமைப்பின் தலைவர் அரிமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"கடந்த 22 ஆண்டுகளாக ஒட்டு மொத்தத் தமிழினமும் ராஜீவ் காந்தி படுகொலையில் உண்மைக் குற்றவாளிகள் இவர்கள் இல்லை என்றும், சர்வதேசச் சதித்திட்டத்தில் பங்கெடுத்தவர்கள் அரசியல் வாதிகள் என்ற போர்வையில் சுதந்திரமாகச் சுற்றித் திரிகிறார்கள் என்றும் நாம் காட்டுக் கூச்சல் போட்டும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே போய்விட்டது.

தூக்குக் கயிறு இன்றா? நாளையா? என்ற மரண வேதனையை மூன்று தமிழர்களும் வாழ்நாளின் இறுதிவரை சிறைக்குள்ளேயே அனுபவித்து தீர வேண்டும் என்ற கொடுமையை நளினியும் அனுபவித்து வரும் வேளையில் வழக்கை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்த தியாகராஜன் என்ற உயரதிகாரி, நான் தவறாக பேரறிவாளனின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தேன் என்று 22 ஆண்டுகள் கழித்து உளச்சான்று உறுத்த தற்போது வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதன் பின்னராவது கொஞ்ச நஞ்சம் எஞ்சியிருக்கும் நீதி இந்த நாட்டில் நிலைபெற வேண்டுமாயின் பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட மரண தண்டனைச் சிறையாளிகளையும் வாழ்நாள் தண்டனை பெற்ற நளினியையும் உடன் விடுதலை செய்ய வேண்டும்.

அது மட்டும் போதாது. ராஜீவ் காந்தியைக் கொன்ற உண்மையான குற்றவாளிகள் யார்? என்பதையும் கண்டறிய வேண்டும். சுப்பிரமணியன்சாமி உள்ளிட்ட சிலரைக் கைது செய்து பக்கச் சார்பற்ற அதிகாரிகளைக் கொண்டு விசாரித்தால் மட்டுமே உண்மை உலகிற்கு தெரியவரும் என தமிழர் களம் மத்திய அரசைக் கேட்கி கொள்கிறது." என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தேனீக்கள் அருகி வருவதால் விளைச்சல் குறைவடைகிறது

(கொழும்பு)

வட மத்திய மாகாணத்தில் தேனீக்களின் தொகை குறைந்துள்ளதால் பழங்கள், காய்கறிகளின் விளைச்சல் குறைந்துவிட்டதென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரிஸன் நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

மகரந்த மணிகளை பரவலடையச்செய்வதனால் பூக்களில் மகரந்த சேர்க்கை ஏற்பட தேனீக்கள் உதவுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள தேனீ இனங்களின் எண்ணிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கேள்வியெழுப்பிய போதே பி.ஹரிஸன் எம்.பி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நாம் நாட்டில் தேனீக்களின் வகைகளைத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாதுவிடின் எம்மால் பழங்கள், காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்க முடியாது என அவர் கூறினார்.

இந்த கேள்வியை கேட்டதற்காக வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி விஜித விஜயமுனி சொய்ஸா ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரை பாராட்டினார்.

இலங்கையில் 130 வகையான தேனீ இனங்கள் உள்ளன எனவும் அருகிச் செல்லும் தேனீ இனங்களின் எண்ணிக்கை இன்னமும் அறியப்படவில்லை எனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# வடக்கு விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சர்கள் மரங்களை நாட்டினர்

(யாழ்ப்பாணம்)





தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் வாரத்தில் மரங்களை நாட்டினால் அடுத்த மாவீரர் தினத்தில் உமது நினைவாக மரம் நாட்ட வேண்டி வரும் என்று வடக்கு மாகாண விவசாயம் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு தொலைபேசி மூலம் அநாமதேய கொலை அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்ட போதிலும் நேற்றுமுன்தினம் அவர் மன்னாரில் மரங்களை நாட்டியுள்ளார்.

மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கும் விவசாய அமைச்சருக்குமான கலந்துரையாடல் உயிலங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பண்ணையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்த போது அவருக்கு வந்த தொலைபேசி அழைப்பில், மரங்களை நாட்டுவதை நிறுத்த வேண்டும் என்று தெரிவித்தும் அவ்வாறு நாட்டினால் அடுத்த மாவீரர் தினத்தில் அவரது நினைவாகவும் மரங்களை நடவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் விவசாயிகளுடனான கலந்துரையாடலை நிறைவு செய்து உரையாற்றிய அமைச்சர், மரணித்தவர்கள் நினைவாக மரங்களை நடுவது குற்றமாகாது.

இங்கு தங்கள் பிள்ளைகளைப் போரில் இழந்த ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் கண்ணீர் விட்டு அழுது தங்கள் துயரை ஆற்றுவதற்கு இந்த அரசு தடைவிதிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. மாவீரர்துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்ட நிலையில் எல்லோரும் வீடுகளில் அவர்களது நினைவாக உயிருள்ள ஜீவ சமாதிகளாக மரங்களை நடுவோம் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் , வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண போக்குவரத்து, மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (அ-6)

# தப்பிச்சென்ற சிப்பாய்களை கைது செய்ய நடவடிக்கை

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற சிப்பாய்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாடு முழுவதிலும் விசேட நடவடிக்கை மேற்கொளளப்படவுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 20ஆயிரம் சிப்பாய்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இராணுவப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தேடுதல் வேட்டைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வாறு தப்பியோடியவர்களைக் கைது செய்யும் பணிகளுக்காக இராணுவ பொலிஸாருக்கு நாளதோறும் 40 வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

விடுமுறைக்காக வீடு சென்று திரும்பாதவர்கள், சேவைக்குரிய காலத்தில் சமுகமளிக்காதவர்கள் உள்ளிட்டவர்களும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களாகவே கருதப்படுகின்றனர். கைது செய்யப்படும் சிப்பாய்கள் இராணுவ நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2013ஆம் ஆண்டு மே மாதம் வரையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களுடன் 16 இராணுவச் சிப்பாய்களுக்கு தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பாலியல்வன்கொடுமை, கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் இவ்வாறு இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற சிப்பாய்களுக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், மிகச் சொற்பளவிலானவர்களே அதாவது 2 தொடக்கம் 3 வீதமான படைச் சிப்பாய்களே இவ்வாறான கொள்ளை, பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருப்பதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மொரிசியஸ் நாட்டில் புலிகளுக்கு நினைவுத்தூபி

(மொரிசியஸ்)

மொரிசியஸ் நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நினைவுத் தூபியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

போரில் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்து 46ஆயிரத்து 629 புலி உறுப்பினர்களை நினைவு கூரும் வகையில் மொரிசியஸின் பின் பேசின் ரோசாஜிலி என்னும் நகரில் இந்த நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினமான நேற்று இந்த நினைவுத் தூபி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பின் பேடிஸ் நகரின் மேயர் அன்ட்ரே ட்ரைசன்ட் இந்த நினைவுத் தூபியை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய நாடுகள் அரச தலைவர்கள் அமர்வுகளை மொரிசியஸ் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கருத்துரைகள்

(யாழ்ப்பாணம்)

கே.ஏ.சுப்பிரமணியத்தின் 24 ஆவது நினைவு தினத்தையொட்டி கருத்துரைகளும் கலந்துரையாடல்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதி, 405 இல் அமைந்துள்ள பு.ஜ.மா.லெ.கட்சி பணிமனையில் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் "சமகாலச் சூழலின் பொதுவுடைமை இயக்கத் தின் தேவையும் அவசியமும்'' எனும் தொனிப்பொருளில் அ.சீவரத்தினம், ''வெகுஜன இயங்கு தளங்களில் வேலைகளை முன்னெடுத்தல்'' எனும் தொனிப்பொருளில் த.பிரகாஷ் ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர். (அ-2)

# கண்டுபிடிப்பாளர்கள் தேசிய கண்காட்சி

(கொழும்பு)

இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கான தேசிய கண்காட்சி நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை முதல் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை வரையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டைச் சேர்ந்த 800 இற்கும் அதிகமான கண்டுபிடிப்பாளர்கள் பங்குபற்றவுள்ள இத்தேசியக் கண்காட்சியை தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

திறந்த விண்ணப்பதாரிகளாக 302கண்டுபிடிப்பாளர்கள் பங்குபற்றவுள்ள நிலையில், பாடசாலை மட்டத்தைச் சேர்ந்த 248 கண்டுபிடிப் பாளரும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 205 கண்டுபிடிப்பாளர்களும் தமது கண்டுபிடிப்புக்களை இக் கண்காட்சியில் முன்வைக்கவுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் சம்பிக்க கூறுகையில்,

இலங்கை கண்டுபிடிப்பாளர்களை பொருளாதார ரீதியில் ஊக்குவிக்கும் முகமாகவே இக்கண்காட்சி நடத்தப்படுகிறது.

அத்துடன் தமது கண்டுபிடிப்புக்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைப்படுத்துவதற்கும் தமது படைப்பின் மூலம் நிரந்திர வருவாயை பெற்றுக் கொள்வதற்கும் வழிவகுத்துக் கொடுக்கப்படுகிறது.

கிடைக்கப் பெற்ற ஆயிரத்து 500 விண்ணப்பங்களுள் தெரிவு செய்யப்பட்ட 800 விண்ணப்பதாரிகளுக்கே மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிக்கமைவாக தேசிய கண்காட்சியில் பங்குபற்றுவதற்கான அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றார்.

இம்முறை 12 தலைப்புக்களின் கீழ் கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்படவிருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# மாகாண சபையின் கல்வி முறைமையும் அதிகாரங்களும்

வடக்கு மாகாண சபைத்தேர்தல் நடைபெற்று மாகாணசபையொன்று பதவியேற்றுள்ளது. இலங்கையில் 1987 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி அரசியல் அமைப்பில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தமானது மாகாணசபைகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது.

மாகாண சபைகள் தொடர்பான சட்டவாக்கங்கள் இலங்கை அரசியல் யாப்பின் 154 A முதல் 154 T வரை அமைந்த சரத்துக்களாக இடம்பெற்றுள்ளன.

இச்சரத்துக்களின் அடிப்படையில் 25 வருடங்களின்பின் இறுதியாக அமைக்கப்பட்டதே வடக்கு மாகாண சபையாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்காக உருவாக்கப்பட்ட மாகாண சபையானது ஏனைய மாகாணங்களிளெல்லாம் உருவாக்கப்பட்ட பின்னர் பல நாடுகளின் அழுத்தங்கள் காரணமாக எமக்கும் இப்போது கிடைத்துள்ளது.

இந்நிலையில் மாகாண சபைக்குள்ள அதிகாரங்கள் எவை என்பது தொடர்பான பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் வெகுசன சாதனங்கள் ஊடாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் மாகாண கல்வி முறைமை பற்றியும் அதற்குள்ள அதிகாரங்கள் பற்றியும் நோக்குவோம்.

ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர் கல்வி நிர்வாக அமைப்பில் மாகாண சபைச் சரத்துக்களின்படி மாற்றங்கள் கொண்டு வரப்படும். நாட்டின் புதிய முழுமையான கல்வி அமைப்பின் பிரதான பிரிவுகள் பின்வரும் மட்டங்களைக் கொண்டுள்ளன.

**தேசிய மட்டம்:-** மத்திய அமைச்சுக்கள், தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வி ஆணைக்குழு, பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மற்றும் ஏனையவை.

**மாகாண மட்டம்:-** மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம்.

**வலய மட்டம்:-** முன்னைய பிரதேச கல்வித் திணைக்களத்தின் பிரதியீடாகவும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஒரு அங்கமாகவும் இது அமைகிறது.

**புதிய பிரதேச மட்டம்:-** புதிய பிரதேச செயலகங்கள் தோறும் இயைபுபடுத்திய தான ஒரு பிரதேச அமைப்பு. அதாவது கோட்டக் கல்வி காரியாலயங்கள்.

**பாடசாலை மட்டம்:-** கல்வி அமைச்சின் இறுதி நிறுவனம் அல்லது முதல் நிலை முகாமை நிலையம்.

**மாகாணக் கல்வி முறையின் அமைப்பு**

**மாகாணக் கல்வி அமைச்சு:-** மாகாணக் கல்வி அமைச்சானது மாகாணக் கல்விச் செயலாளரினால் தலைமை வகிக்கப்படும். அவர் பெரும்பாலும் இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்தவராக அல்லது கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்தவராக இருப்பதுடன் அவரே மாகாண கல்வி அமைச்சருக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறுபவராகவும் இருப்பார்.

அவருடைய செயற்பாடுகள் மத்திய கல்வியமைச்சினால் வெளியிடப்படும் கல்விக் கொள்கை வழிகாட்டலுக்கும் மாகாணசபையின் மாகாண கொள்கை வழிகாட்டலுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு மாகாணக் கல்விச் செயலாளர் தேசியக் கொள்கை, மாகாணக் கொள்கை பற்றிய விளக்கங்களை அளிப்பார்.

**மாகாண கல்வித் திணைக்களம்**

மாகாணக் கல்வித் திணைக்களம் மாகா ணக் கல்விப் பணிப்பாளரால் தலைமை வகிக்கப்படும். இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந் தவராக சிரேஷ்ட நிலையில் உள்ளவராக இருப்பதுடன் மாகாணத்தின் கல்வித்திட் டமிடல், அமுலாக்கம், நிர்வாகம், வழிகாட் டல், நெறிப்படுத்தல் போன்ற சகல கல்விச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாகவும் இருப்பார்.

தேசிய நிலை அமைப்புகளினதும் மாகாணக் கல்வி அமைச்சினதும் கல்விச் செயற்பாடுகளை அமுலாக்கம் செய்பவராகவும் இருப்பார். இவர் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கல்விப் பணிப்பாளர்களை தமக்கு உதவியாக வைத்துச் செயற்படுவார்.

**வலயக் கல்வித் திணைக்களம்**

ஒரு மாகாணத்தில் பல கல்வி வலயங்கள் அமையலாம். ஒரு கல்வி வலயம் பல கோட்ட அமைப்புக்களின் தொகுதியாக அமையும். ஒரு வலயக் கல்விப் பணிப்பாளர் இருப்பார்.

இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்தவராக இருப்பதுடன் பாட நிபுணத்துவம் உடைய



கல்வித் தரிசனம்

இரண்டாம், மூன்றாம் வகுப்பைச்சேர்ந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் கூறப்படும் ஏனைய உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுத் தனது செயற்பாடுகளை மேற்கொள்வார்.

வலயத்தின் கல்வி நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்தல், கண்காணித்தல், இயைபுபடுத்தல் முதலான அபிவிருத்தி நடவடிக்கைகள் வலயக் கல்வித் திணைக்களத்தின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

இவருக்கு உதவியாக கல்வி அபிவிருத்தி திட்டமிடல், முகாமைத்துவம், நிர்வாகம் ஆகியவற்றின் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் செயற்படுவதுடன் மாகாணத்திற்கும் அமைச்சுக்கும் தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் அனுப்புவார்.

**கோட்டக் கல்வி அலுவலகம்**

கோட்டக் கல்வி அலுவலகம் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு -II பிரதிக் கல்விப் பணிப்பாளர்ஒருவரால் தலைமை வகிக்கப்படும். இவருக்கு உதவியாக பாடசாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர்.

கோட்ட நிர்வாகம் தமது பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலைகளினதும் சகல கல்வி நிகழ்ச்சியினதும், அமுலாக்கத்திற்கும்,பொதுநிர்வாகத்திற்கும் பொறுப்புடைய தாகும்.

**இணைப்புக்கள்**

பெரும்பாலான கல்விச்செயற்பாடுகள் மாகாணங்களுக்கு உரித்துடையனவாக ஆக்கப்பட்டுள்ளன. ஆனால் கலைத்திட்ட அபிவிருத்தி, ஆசிரியர் பயிற்சி, பொதுப் பரீட்சைகள், கல்விச்சேவைகள் என்பன போன்ற பரந்து பட்ட செயற்பாடுகள் மத்திய அமைச்சின் பொறுப்பில் தேசிய ரீதியில் கையாளப்பட வேண்டியதாகும். எனவே இவ்வமைப்பின் வெவ்வேறு மட்டங்களுக்கிடையே வலுவான இணைப்புக்கள் அவசியம்.

**மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்.**

இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தம்- அட்டவணை-I பின் இணைப்பு -III

✷ குறிப்பிடப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அரசாங்கப் பாடசாலைகள் அனைத்திற்கும் வசதிகளை ஏற்படுத்தல். குறிப்பிட்ட பாடசாலைக்கான தேசிய பாடசாலைகள், பணியணியினருக்கான விசேட பாட சாலைகள், விசேட அபிவிருத்தித் திட்டங்க ளுக்கான பாடசாலைகள்

✷ பின்வரும் பாடசாலைகளது முகாமைத்துவமும் மேற்பார்வையும்

அ.சகல முன்பள்ளிகள்

ஆ.மேலே குறிப்பிடப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த சகல அரசாங்க பாடசாலைகளும்

✷ கல்விப் பணியணியினரின் அனைவரினதும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் இடமாற்றமும்

ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், தேசிய சேவைக்குரிய ஆனால் மாகாண அதிகாரசபையில் தற்காலிகமாக பணியாற்றும் உத்தியோகத்தர்கள், பகிர ங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன் முறையீடு செய்யும் உரிமையுடையோராவார். மாகாண சேவைக்குரிய உத்தியோகத்தர்கள், பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு தமது உத்தியோக இழப்பு தொடர்பாக மனுச்செய்ய உரிமை டையோராவார்.

✷ பல்கலைக்கழகங்கள், கல்விக் கல்லூரிகள் போன்றவற்றிலிருந்து பட்டங்களையும் டிப்ளோமாக்களையும் பெற்றவர்களை கற்பித்தல் சேவைக்கு நியமித்தல்.

✷ இவ்வாறான வகுதியினர் போதியளவு பெறப்படும்வரை கற்பித்தல் சேவைக்கு நியமனம் செய்யப்படுவது பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்படும் நியமனப்பரீட்சைகளின் முடிவுகளிலிருந்து மேற்கொள்ளப்படும். இப்பரீட்சை முடிவுகளின்படி மாகாண அதிகாரசபையுடன் சேர்ந்து நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு தெரிவுகள் இடம்பெறும்.

✷ தரம் 1 ABC பாடசாலைகளின் அதிபர் நியமனங்கள் கல்வி விடயத்துக்குப் பொறுப்பான கல்வி அமைச்சரின் செயலாளரினால் அல்லது பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

✷ தரம் 1 ABC பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளது அதிபர் நியமனங்கள் (கல்வி அமைச்சினால் தெரிவுக்கான அம்சங்கள் வரையறுக்கப்படும்)

✷ ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியினரை பயிற்றுவித்தல் தேசிய கல்வி நிறுவகத்தின் பொறுப்பாகும். மாகாண அதிகார சபைகள் தமது தேவைகளை தேசியகல்வி நிறுவகத்திற்கு எழுதலாம்.

✷ ஆலோசனை கூறும் செயற்பாட்டைக் கொண்ட மாகாணக் கல்விச் சபைகளது நியமனம் கல்வி அமைச்சரின் பொறுப்பாகும். எவ்வாறாயினும் மாகாண அதிகார சபையின் முதலமைச்சருடன் ஆலோசித்து இது மேற்கொள்ளப்படும்.

✷ கல்வி அமைச்சினால் வழங்கப்படும் குறிப்புரைகளுக்கு அமைய மாகாண அதிகாரசபைகள் பாடசாலை அதிகார சபையை ஸ்தாபிக்கும்.

✷ மாகாண அதிகார சபைகள் பாடசாலைச் சபைகளது தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும்.

✷ திட்டங்களின் தயாரிப்புகள் (கல்வி அபிவிருத்தித் திட்டங்கள், வருடாந்த அமுலாக்கல் திட்டங்கள்)

✷ வருடாந்த கல்வி அபிவிருத்தித் திட்ட த்தை அமுலாக்கல்

✷ அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகளின் செயற்பாடுகளை மதிப்பிடல்

✷ தேசிய கல்வி நிறுவனத்தின் அனுமதியுடன் சேவைக்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

✷ பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன்உள்ளூர்பரீட்சையைநடத்துதல்

✷ முறைசாராக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கல்

✷ முன்பாடசாலைகளை பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்

✷ ஆரம்பக் கலைத்திட்டத்தினதும் இடைநிலைக் கலைத்திட்டத்தில் தெரிவு செய்த பாடங்களினதும் உள்ளூர் வேறுபாடுகளுக்காக தேசிய கல்வி நிறுவனத்தின் அனுமதியைப் பெறுதல்

✷ கல்வி சார்ந்த கட்டடங்களையும் நூல் நிலையங்களையும் விளையாட்டு மைதானங்களையும் அமைத்தலும் பராமரித்தலும்

✷ கற்பித்தல் உபகரணங்கள், கட்புல சாதனங்கள், செவிப்புல சாதனங்கள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்க ளைப் பெற்றுக்கொள்ளலும் உபயோகித்தலும்

✷ கல்வியமைச்சினால் குறிப்பிடப்பட்ட விசே பொருட்கள் தவிர்ந்த ஏனைய விஞ்ஞான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுதலும் விநியோகித்தலும்

✷ கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்று பாடசாலைப் பாடநூல்களை உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும்

✷ தேசிய நூல் நிலைய சேவைகள் சபையின் வழிகாட்டல்களுக்கு ஒப்ப பாடசாலை நூல் நிலையங்களை அமைத்தலும் அபிவிருத்தி செய்தலும்

✷ ஆசிய நாடுகளின் கல்வி வளர்ச்சியில் ஜப்பானுக்கு அடுத்ததாகக் குறிப்பிடப்படும் இலங்கை நீண்டகால கல்வி வரலாற்றைக் கொண்டது.

கடந்த காலங்களில் இலங்கையின் கல்விச் செயற்பாடுகளில் புகுத்தப்பட் மாற்றங்கள் இலங்கையின் கல்வி நோக் கங்கள், குறிக்கோள்கள் என்பவற்றைத் தெளிவாகப் புலப்படுத்துவனவாக உள்ளன. இந்நோ க்கங்களை அடைவதற்கான தேசிய கொள்கை வகுத்தலுக்கேற் பவே மாகாண சபைக்குரிய அதிகாரங் கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே மாகாண சபையானது இலங்கையின் தேசிய கல்விக் கொள்கைக்கு மாறாக செயற்பட முடியாதென்பதை வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.

கு.சரவணபவானந்தன் (J.P)
BA. PGDE SLPS I, SLEAS
ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர், வேலணை

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

பாலங்களைக் கட்டுவதற்குப் பதிலாக சுவர்களை அமைத்து விடுவதால் பல மனிதர்கள் தனித்து விடப்படுகிறார்கள்.

– ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## பயந்தால் அதற்குத் தீர்வு உண்டு பயம்போல் நடித்தால் மருந்து ஏதுமில்லை!

கடந்த சில தினங்களாக வட பகுதியில் ஒரு பதற்றமான சூழ்நிலை காணப்படுகின்றது.

பதற்றமான சூழ்நிலைக்கான காரணம் என்ன? என்பதை நாம் சொல்லித்தான் நீங்கள் அறிய வேண்டும் என்றில்லை.

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் தினம் என்பதால் மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் நடக்கலாம்.

எனவே அதனைத் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் முக்கியமான இடங்களில் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப் படுகிறது.

இத்தகைய பாதுகாப்பு பலப்படுத்தல் என்பது தேவைதானா? என்று யாரேனும் கேட்டால் அந்தக் கேள்வி நியாயமானது என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டால், அது இலங்கை அரசுக்கு ஏதேனும் வகையில் பாதிப்பானதா? என்றால் இல்லவேயில்லை.

மாறாக மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க அனுமதிப்பதன் மூலம் தமிழ் மக்கள் தங்கள் இழப்புகளின் துயரங்களில் இருந்து ஆற்றுப்பட முடியும்.

இத்தகைய ஆற்றுகை இன ஒற்றுமைக்குக் கூட வழிகோலலாம்.

மாவீரர் என்போர் அரசிற்கு – படையினருக்கு எதிராகப் போராடியவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை நினைவு கூருவதைத் தடை செய்வது நியாயமானது என்று அரச தரப்பு வாதிடலாம்.

ஆனால் இங்கு மாவீரர் தினம் என்பது ஒரு இனத்தின் உணர்வு சார்ந்த – நினைவுகூரும் உரிமை சார்ந்த விடயம்.

எனவே இது விடயத்தில் அரசும் படைத்தரப்பும் அதிதீவிரமான கட்டுப்பாட்டை விதிக்க நினைப்பது இணக்கப்பாட்டு அரசியலை விரும்புகின்ற தமிழ் மக்களைக்கூட ஆத்திரமடையச் செய்யும்.

ஆக, மாவீரர் தினம் குறித்து அரசும் படைத்தரப்பும் நடந்துகொள்ளும் காட்டாப்புக்களே மாவீரர் தினத்திற்கு உத்வேகத்தைக் கொடுக்கின்றது என்று கூறலாம்.

அதேநேரம் இது அரசிற்குத் தெரியாத விடயமும் அல்ல.

மாவீரர் தினத்தில் படைத்தரப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நோக்கியவாறு காத்திருப்பதற்குள்ளும் அங்கு ஒரு பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குள்ளும் இரு காரணம் இருக்கலாம்.

அதில் ஒன்று; விடுதலைப்புலிகள் மீண்டும் ஒரு போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்ற மனப்பிரமை. இந்தப் பிரமையின் காரணமாக மாவீரர் தினத்தை நினைவுகூர அனுமதிக்கக்கூடாது என்று அரசு கருதலாம்.

அவ்வாறானதொரு கருத்து நிலைக்குத் தீர்வு உண்டு.

அதாவது இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதன் மூலம் அந்த மனப் பிரமை அடியோடு வெட்டப்படும்.

மாறாக மாவீரர் தினத்தில் படைத்தரப்பை அங்கும் இங்குமாக அலையவிட்டு விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகும் வாய்ப்பு உள்ளது போல பயந்து காட்டி, படைத்தரப்பிற்கு இங்கு ஒரு நிரந்தர இருப்பிடத்துக்கு வழிசமைப்பது. இந்த நோய்க்கு யாராலும் தீர்வு கூற முடியாது.

ஆக, பயம் என்ற நோய்க்கு தீர்வு உண்டு. பயம் போல நடிக்கும் வியாதிக்கு மருந்து கிடையவே கிடைக்காது.

# வெளிநாடு செல்லும் பெண்கள் தங்க நகை அணிய கட்டுப்பாடு

வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்கள் அதிகபட்சமாக அணிந்து செல்லத்தக்க தங்க நகைகளின் அளவானது 15 பவுண்களுக்கும், ஆண்கள் அணிந்து செல்லத்தக்க தங்கத்தின் அளவானது 5 பவுண் களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தங்கம் கடத்தப்படுவதையும் வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் தங்கம் கொண்டு வரப்படுவதையும் தடுக்க விசேட திட்டங்களை அமுல்படுத்த இலங்கை சுங்கத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுங்க திணைக்கள உயரதிகாரிகளின் விசேட கூட்டத்திலேயே விசேட திட்டங்களை அமுல் செய்யும் முடிவு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பயணிப்போர் அணிந்து செல்லத்தக்க தங்க நகைகளின் அளவில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படவுள்ளன.

வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்கள் அதிகபட்சமாக அணிந்து செல்லத்தக்க தங்க நகைகளின் அளவானது 15 பவுண்களுக்கும், ஆண்கள் அணிந்து செல்லத்தக்க தங்கத்தின் அளவானது 5 பவுண்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த தங்க நகைகளை அணிந்த நிலையிலேயே குறித்த பயணி செல்ல வேண்டும் என நிபந்தனை விதிக்கும் சுங்க திணைக்களம், மீண்டும் நாட்டுக்குள் திரும்பி வரும் போதும் அதே அளவான தங்க நகைகளை குறித்த இலங்கையர் அணிந்திருக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சுங்கப் பேச்சாளரும் சுங்க சேவைகள பிரிவின் பணிப்பாளருமான லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

இந்த கட்டுப்பாடுகள் தொடர்பான விபரங்கள் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் என தெரிவித்த அவர், குறித்த கட்டுப்பாடுகள் இலங்கையர்கள் விடயத்தில் மட்டுமே அமுல் செய்யப்படும் என தெரிவித்தார்.

எவ்வாறாயினும் வெளிநாட்டவர்கள் தொடர்பிலும் விசேட திட்டங்களை அமுல் படுத்தவுள்ள சுங்க திணைக்களம் அவர்களும், தாம் வெளியேறும் போது கொண்டு செல்லும் தங்கம் குறித்து சுங்க அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவது அவசியம் என சுங்க பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் கொச்சி விமான நிலையத்தில் வைத்து 56 இலங்கையர்கள் தங்கம் கடத்தியமை தொடர்பில் அந் நாட்டு சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்தே, அது தொடர்பில் நேற்றுமுன்தினம் சுங்க திணைக்கள உயர் மட்ட அதிகாரிகள் குழு விரிவாக ஆராய்ந்தது.

இதனையடுத்தே சுங்க திணைக்களம் இலங்கையர் ஒருவர் அணிந்து செல்லும் தங்கத்தின் அளவில் கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் விதிக்கும் முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும்

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் நாரந்தனை வட. மேற்கு பிரதேசத்தில் ஜே/56 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று வியாழக் கிழமை பி.ப 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகை பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் இது தொடர்பில் பொது மக்கள் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொது மக்களுக்கு யாழ். செயலகத்தால் அறியத் தரப்படுகின்றது. (எ)

## சத்திய தரிசனம்



கருத்து வேறுபாடுகளை மௌனமாக, அன்புடன் சமன் செய்து உங்கள் செயற்பாடுகளில் சேவைக்கு முதலிடம் தரவேண்டும். ஒருசேவைக் காரியம் என்றால் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்த பணியாற்றவேண்டும். எந்தப் பிரிவினை உணர்வும் உங்கள் மனதைக் கெடுக்கக்கூடாது. கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள்.

இறைவன் கேட்பதெல்லாம் தருகிற பல்தரு போன்றவர். ஆனால் நீ மரத்தின் அருகில் சென்று விரும்பியதைக் கேட்கவேண்டும். மரத்திலிருந்து விலகி தொலைவில் இருப்பவன் நாத்திகன். மரத்துக்கு அருகில் வந்திப்பன் ஆத்திகன். இதுவே வேறுபாடு. மரம் எந்தப் பாரபட்சமும் காட்டுவதில்லை. அது அனைவருக்கும் வரம் தருகிறது. இறைவனைக் கண்டு கொள்ளாவிடிலோ கௌரவித்துப் போற்றாவிடிலோ அவர் தண்டிப்பதோ உன்னைப் பழி வாங்குவதோ இல்லை. அவருக்குத் திருப்தி தரவல்ல குறிப்பிட்ட விசேட வழிபாடு ஒன்றுண்டு என்பதும் இல்லை.

## மாணவர்களுக்கு தொழில்சார் அறிமுக பயிற்சி

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தினால் க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள வசதி குறைந்த மாணவர்களின்நலன் கருதி 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை தொழில்சார் இலவச அறிமுகப் பயிற்சிகள் வதிரியிலுள்ள மேற்குறித்த கழக பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கணனி (MS Office, தமிழ் தட்டச்சு, ஆங்கில தட்டச்சு என்பன தலா 150 மணித்தியால பயிற்சிகளாக வழங்கப்படவுள்ளன.


ஒவ்வொரு பயிற்சிக்கும் முன்னுரிமைப்படி தலா 20 மாணவர்கள் அனுமதிக்கப்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கழக அலுவலகத்திற்கு நேரடியாக வருகைதந்து பெற்றுக் கொள்ளலாமென கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (அ)

## மௌனத்தை கலைப்போம் எனும் நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

யாழ்.தேவை நாடும் மகளிர் அமைப்பினால் பெண்கள் வன்முறைக்கு எதிரான மௌனத்தை கலைப்போம் எனும் நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். சென்.பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் திருமண மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## காலில் விழுந்து வணங்குவது ஏன்?



பழங்காலம் தொட்டே தமிழகத்தில் காலில் விழுந்து வணங்கும் பழக்கம் உள்ளது. இதன் அடிப்படையான காரணம் என்னவெனில் ஆன்றோர்கள் காலிலும் ரிஷிகளின் காலிலும் விழுந்து வணங்குவதால் அவர்களின் ஆசியினால் நம்முடைய பாவங்கள் விலகும் என்பது நம்பிக்கையாகும்.


பொதுவாகவே உயர்ந்த தர்மசிந்தனை கொண்ட பெரியோர்களின் காலில் விழுந்தால் நம் பாவங்கள் விலகி அவர்கள் செய்த புண்ணியங்களும் நமக்குச் சேரும். சுயலாபத்திற்காக பாவிகள் காலில் விழுந்தால் அவர்கள் பாவமும் நம்மை சேர்ந்து விடும். அதேபோல் பணத்திற்காகவும் ஏனைய தேவைக்காகவும் யார் காலிலும் விழக்கூடாது.

மார்க்கண்டேயரின் மரணத்தை முன்கூட்டியே அறிந்து கொண்ட அவர் தந்தை வயதான சான்றோர் அனைவரின் காலிலும் விழச் செய்தார். அதேபோல் சப்தரிஷிகள் காலில் விழும்போது அவர்கள் சீரஞ்சிவியாக வாழு என்றார்கள்.அப்புறம்தான் அவர்களுக்கே மார்க்கண்டேயனின் அல்பாயுசு அமைப்பு தெரியவந்தது. இருந்தாலும் சப்தரிஷிகளின் ஆசீர்வாதத்தால் சிவபெருமானால் மார்க்கண்டேயன் சிரஞ்சீவியாக வாழ்ந்தார் என்பது புராணமாகும்.

நம்முடைய முதல் தெய்வமான பெற்றோர்கள் காலில் விழுந்து வணங்கினால் நம்முடைய கிரகதோஷங்கள் அனைத்தும் விலகிவிடும். பாவங்கள் விலகி வளமான வாழ்வு அமையும் என்பதே உண்மையாகும்.

*நன்றி: அருள் ஒளி*

## டைம் இதழின் சிறந்த மனிதர் பட்டியலில் மோடி




உலகப் புகழ்பெற்ற "டைம்" இதழின் "2013 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர்" விருதுக்கான இறுதிப் பட்டியலில் பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளரும், குஜராத மாநில முதலவருமான நரேந்திர மோடி இடம்பிடித்துள்ளார்.

2013ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் விருதுக்கான நபரை தேர்நதெடுக்க, வாசகர்கள் தங்கள் வாக்குகளை ஒன்லைன் மூலம் பதிவு செய்யும் வசதியை டைம் இதழ் ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ள ஒரே இந்தியர் மோடி மட்டுமே.

குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங், ஜப்பான் பிரதமர் ஷின்ஸா அபே, ரஷ்ய ஜனாதிபதி புடின், ஈரான்ஜனாதிபதி ஹசன்ரெஹானி, ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கெல், கல்வி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி வரும் பாகிஸ்தான் சிறுமி மலாலா, அமெரிக்காவின் இரகசிய ஆவணங்களை கசிய விட்ட ஸ்னோடென், ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜூலி உள்ளிட்ட 42 பிரபலங்கள் இந்தப் பட்டியலில இடம்பெற்றுள்ளன. (2)

# ஹைதியிலிருந்து 150 பேருடன் பயணித்த கப்பல் கவிழ்ந்தது





(மியாமி)

ஹைதியிலிருந்து 150 பயணிகளுடன் புறப்பட்ட படகொன்று பஹாமாசில் கடற்பகுதியில் கவிழ்ந்தது. அதில் பயணித்த 30 பேர் பலியாகினர்.

இச் சம்பவம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

லைப் ஜாக்கெட்டுகள் எதுவும் இல்லாமல் குறிப்பிட்ட அளவு உணவையும் தண்ணீரையும் மட்டுமே தம்முடன் எடுத்துக் கொண்டு இந்த மக்கள் எட்டு முதல் ஒன்பது நாட்களாக இந்தக் கடல் பயணத்தில் ஈடுபட்டிருந்ததாக அதிகாரிகள் மூலம் தெரியவந்துள்ளது.

மீட்புப் பணியினர் முதலில் இவர்களை அணுகியபோது பலருக்கும் கடுமையான நீர்ப்போக்கு இருந்துள்ளது.

அதிகமான சுமை மட்டுமன்றி கடினமான வானிலையும் இந்தப் படகு கவிழ்வதற்குக் காரணமாக இருந்துள்ளது என்று பஹாமாஸ் பாதுகாப்புப் படைச் செயலாளரான ஓரிஜின் டெலிவியாக்ஸ் தெரிவித்தார்.

30 பேர் இறந்திருப்பதை உறுதி செய்த அதிகாரிகள் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவித்தார்கள்.

தங்களால் இயன்றவரை உடல்களை மீட்க முயற்சி செய்வதாகவும் ஒவ்வொரு மாதமும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதாகவும், ஆண்டுதோறும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மக்கள் பலியாவது தொடர்வதாகவும் கடலோரப் பாதுகாப்புத்துறையினர் தெரிவித்தனர்.

புளோரிடா, ஹைதி, பஹாமாஸ் மற்றும் டொமினிகன் குடியரசுப் பகுதிகளில் சமீபகாலமாக இத்தகைய கடல்பயணங்களைத் தவிர்க்குமாறு தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் பாதுகாப்புத்துறை தொடர்ந்து அறிவிப்புகளை வெளியிட்டுவருகின்றது. (2)

## சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் ஆசியா வருகை

(வோஷிங்டன்)

சரவதேச நாணய நிதியத்தின் நர்வாக இயக்குநர் கிரிஸ்டின் லகார்ட் டிசெம்பர் மாத ஆரம்பத்தில் ஆசியாவின் 3 நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,


கிரிஸ்டின் லகார் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை ஆசிய நாடுகளில் குறிபபாக கம்போடியா, தென்கொரியா, மற்றும் மியன்மார் நாடுகளுக்கு சுற்றுபயணம் மேற்கொள்ள உள்ளார்.

இதன்படி கம்போடியா நாட்டில் டிசெம்பர்மாதம் 2 , 3ஆம்திகதிகளிலும் தென்கொரியாவில் 4, 5 ஆம் திகதிகளிலும் மியன்மாரில் 6,7 ஆம் திகதிகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அங்கு அவர் மாநில தலைவர்கள், மூத்த அதிகாரிகளை சந்தித்து உலக பொருளாதார நிலை குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என தெரிகிறது. (2)

# ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்தால் ஆப்கானிலிருந்து படைகள் வெளியேறும்

## ஆப்கானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

"பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஆப்கான் கையெழுத்திட மறுத்தால் அடுத்த ஆண்டுக்குள் அமெரிக்கப் படைகள் திரும்ப அழைத்துக் கொள்ளப்படும். ஒப்பந்தம் கையெழுத்தாவதற்காக, அந்த நாட்டின் 2014 தேர்தல் வரை காத்திருக்க முடியாது" என்று ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய்க்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.



ஆப்கான் பயணத்தின்போது அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், காபூலில் ஹமீத் கர்சாயிடம் இந்த எச்சரிக்கையை விடுத்ததாக, வெள்ளை மாளிகை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமெரிக்கா தயாராகவுள்ளதாகவும, அதல ஆபகானும் கையெழுத்திட வேண்டும் என்றும் ஹமீத் கர்சாயிடம், சூசன் வலியுறுத்தினார்.

ஆனால், அதற்கு புதிய நிபந்தனைகளை விதித்துள்ள ஜனாதிபதி கர்சாய், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட தயாராகவில்லை.

எதிர்வரும் 2014இல் ஆப்கானில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில்,

அமெரிக்க மற்றும் நேட்டோ படைகளுக்கு சட்ட ரீதியாக பாதுகாப்பு வழங்குவதிலுள்ள பிரச்சினையே, ஹமீத் கர்சாயின் மறுப்புக்கு காரணமாக இருக்கலாம்.

ஒப்பந்தத்தில் ஹமீத் கர்சாய் கையெழுத்திடவில்லையெனில், ஆப்கானுக்கு உதவிகள் வழங்குவது குறித்து நேட்டோ மற்றும் பிற நாடுகள் அளித்த உறுதிமொழிகள் பாதிக்கப்படும் என்றும் வெள்ளை மாளிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து ஆப்கான் மீது அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் போர் தொடுத்தன.

இந்த நிலையில், அடுத்த ஆண்டு இறுதியில் நேட்டோ படைகள் ஆப்கானில் இருந்து வெளியேறப் போதாக அறிவித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (2)

# மும்பை தாக்குதல் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

## பாகிஸ்தானுக்கு அமெ.,ஐ.நா.வலியுறுத்து

2008ஆம் ஆண்டு மும்பையில் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு அமெரிக்காவும், ஐ.நாவும் பாகிஸ்தானை வலியுறுத்தியுள்ளன.

மும்பை தாக்குதலின் 5ஆவது நினைவு நாள் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்,

மும்பை தாக்குதலுக்கு திட்டமிட்டவர்கள், நிதி வழங்கியவர்கள், ஆதரவாக செயறபட்டவர்கள் அனை வரையும் சட்டத்தின் முன் பாகிஸ் தான் நிறுத்த வேண்டும். இதுபோன்ற பயங்கரவாத தாக்குதல்கள், நம் அனைவரது பொது அமைதி மற்றும் பாதுகாப்புக்கும் எதிரானவை.

இத்தகைய சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்க மற்றும் இந்திய அரசுகள் இணைந்து செயலாற்றி வருகின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில், உலகின் மிகச்சிறந்த மாநகரங்களில் ஒன்றான மும்பையை பயங்கரவாதிகள் முற்றுகையிட்டு, ஆறு அமெரிக்கர்கள் உடபட நூற்றுக் கணக்கானோரைக் கொன்று காயப்படுத்தியதைக் கண்டு இந்த உலகமே உறைந்து போனது. அவர்களது கோழைத்தனமான முயற்சி, மும்பை வாசிகளின் ஒற்றுமையின் முன்னால் தோற்றுப்போனது என்று கூறினார்.

இதேவேளை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார். மும்பை தாக்குதல் நினைவு நாளையொட்டி, அமெரிக்க -இந்திய பொது விவகாரக் குழுவும், ஆசிய பசுபிக் பகுதிகளுக்கான அமெரிக்க யூதர்கள் குழுவும் நியூ யோர்க்கில் நடத்திய நிகழ்ச்சியி லேயே அவர் இவ்வாறு கூறினார். அப்போது அவர் கூறுகையில், மும்பையில் 166 பேரின் உயிர்களை பலி கொண்ட பயங்கரவாதத் தாக்குதல் மிகவும் கொடூரமானது. இதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டியது அவசியம் என்றார். (2)

## எவர் மனமும் புண்படாது தெலுங்கானா உருவாக்கப்படும்


(புதுடில்லி)

"எவர் மனமும் புண்படாத வகையில் தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்படும்" என்று மத்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே கூறினார்.

ஆந்திராவை பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்குவதற்காக ஏற்பாடுகளை செய்ய, மத்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே தலைமையில் அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டு பலமுறை கூடி விவாதித்துள்ளது.

மாநிலத்தை பிரிப்பது தொடர்பான அறிக்கையை மத்திய அரசிடம் விரைவில் இது தாக்கல் செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


இந்நிலையில், ஷிண்டேவை மத்திய அமைச்சர்கள் ஜெய்ராம் ரமேஷ், ஜெய்பால் ரெட்டி ஆகியோர நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர்.




தனி மாநில விவகாரம் பற்றி இவர்கள் ஆலோசித்ததாக கருதப்படுகிறது. இந்த சந்திப்புக்குப் பின்னர் பேட்டியளித்த ஷிண்டே, கூறுகையில், "இரு மாநிலங்களையும் சேர்ந்த எவரது மனமும் புணபடாத வகையில் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க, அமைச்சர்கள் குழு முயற்சிக்கிறது.

அமைச்சர்கள் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பாதுகூடிய விரைவில்சமர்ப்பிக்கபபடும். தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவதற்கான மசோதாவை ஆந்திர சட்டப்பேரவையில் ஒரு மாதத்துக்கு பதிலாக 15 நாட்களில் நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசு கெடு எதுவும் விதிக்கவில்லை" என்றார். (2)

# தவான் சதம் கரீபியனை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா





மேற்கிந்தியத் தீவுகள் -இந்திய அணிக்கு இடையிலான போட்டியில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் தொடரையும் கைப்பற்றியுள்ளது.

இந்தியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி கான்பூரில் நேற்று நடைபெற்றது.

முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 263 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அதிகபட்சமாக சாமுவேல்ஸ் 71 ரன்களும், பாவெல் 70 ரன்களும் விளாசினர். பிராவோ 51 ரன்கள் (நொட் அவுட்) எடுத்தார்.

இதையடுத்து 264 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கைத் துரத்திய இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஆகியோர் விளையாடினர். 4 ரன்கள் மட்டுமே எடுத்த ரோகித் சர்மா, ராம்போல் பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் ஷிகர் தவான் அதிரடியாக ஆடி அணியின் ஓட்டஎண்ணிக்கையை மளமளவென உயர்த்தினார்.

அவருடன் இணைந்த ஹோலி 19 ஓட்டங்களில் வெளியேறினார். அதன்பின்னர் ஷிகர் தவானுடன் இணைந்து யுவராஜ் சிங்கும் மேற்கிந்தியத் தீவுகள் பந்துவீச்சை பதம் பார்த்தார்.

பந்துகளை பவுண்டரிகளாக விளாசிய ஷிகர் தவான், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 5-வது சதத்தை பதிவு செய்தார். இதன்மூலம் இந்த ஆண்டில் 5 சதங்களை அடித்த முதல் துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையை தவான் பெற்றுள்ளார்.

தவானுடன் இணைந்து ஆடிய யுவராஜ் சிங்கும் அரை சதம் கடந்தார். ஆனால் அவர் 55 ஓட்டங்களில் நரேனிடம் விக்கெட்டை இழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 190 ஆக இருந்தது. தொடர்ந்து ஆடிய தவான், 119 ரன்களில் பிராவோ பந்தில் அவுட் ஆனார். தவானைத் தொடர்ந்து பொறுப்புடன் ஆடிய ரெய்னா-தோனி ஜோடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

இதற்கிடையே 34 ரன்கள் சேர்த்த ரெய்னாவையும் பிராவோ வெளியேற்றினார். பின்னர் தோனியும்(23) ஜடேஜாவும் (2) இணைந்து வெற்றியை உறுதி செய்தனர்.


23 பந்துகள் மீதமிருந்த நிலையில், இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அத்துடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரையும் 2-1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது.

சதம் அடித்து இந்திய அணியின் வெற்றியை எளிதாக்கிய ஷிகர் தவான் நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தொடர் நாயகன் விருது விராட் ஹோலிக்கு வழங்கப்பட்டது.

# கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர் வரலாற்றுச் சாதனை



ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டிக்கான இறுதித் தெரிவில் கோண்டாவில் சிவபூமி மனவளர்ச்சிப் பாடசாலை மாணவர் மூவர் தெரிவாகி அவுஸ்திரேலியாவில் நடைபெறும் சர்வதேசப் போட்டியில் பங்குபற்றுவதற்கு அவுஸ்திரேலியா பயணமாகியுள்ளனர்.

சி. தனுஷன், இ.கிரோன்பிளைக்னோ, சி.துஷ்யந்தன் ஆகிய மாணவர்களே மேற்படி பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் கடந்த நான்கு மாத காலமாக யாழ்.பல்கலைக்கழக மைதானத்திலும், கொழும்பு சர்வதேச மைதானத்திலும் விசேட பயிற்சி பெற்றனர்.

யாழ்.பல்கலைக்கழக உடற்பயிற்சி விரிவுரையாளர் ராதை அருளானந்தம் இவர்களுக்கான பயிற்சியை வழங்கியுள்ளார்.

இம்மாணவர்களுடன் இலங்கையின் வெற்றியாளர் 14 மாணவர்களும் இணைப்பாளர்களும் அவுஸ்திரேலியா பயணமானார்கள்.

வட மாகாண விசேட ஒலிம்பிக் பணிப்பாளர் இளம்பிறையன், இலங்கை ஒலிம்பிக் (விசேட) முகாமையாளர் பிரான்சிஸ் போல் ஆகியோரும் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

சிவபூமி பாடசாலை மாணவன் சி.துஷ்யந்தன் ஏற்கெனவே 2010-ம் ஆண்டு கிறீஸ் நாட்டில் எதென்ஸ் நகரில் 100 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விளையாட்டு வீரர்களுக்கான பயண ஒழுங்குகள் மற்றும் வழிகாட்டுதல்களை சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் மேற்கொண்டிருந்தார்.

# தமிழர்களை அடக்க முயன்றால்...

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் [illegible]ற மரம்நடுகை நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் கல்வியங்காட்டிலுள்ள அலுவலக வளாகத்தில் மரம் நடுகை நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

மரம் நடுகை நிகழ்வில் மரக்கன்றினை நடுகை செய்த பின்பு ஊடகவியலாளர்களுக்கு கருத்துக் கூறுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மரம் நடுவது என்பது எங்களுடைய ஒரு பரம்பரை எங்களை விட்டுப் போனபடியால் புதிய பரம்பரை வருவதற்கு நாங்கள் தத்துவமாக எடுத்துக் காட்டும் வகையில்தான் இந்த மரங்களை நாட்டுகின்றோம்.

எங்களுடைய தமிழ் மக்களில் பல இளைஞர், யுவதிகள் எங்களை விட்டுப் போய்விட்டனர்.

எங்களுடைய வாழ்க்கையில் இளைஞர் சமுதாயத்திலே ஒரு மேம்பாடு வரவேண்டும் என்றால் பிள்ளைகள் தேவை. மாணவர் சமுதாயம் தேவை. அதை எடுத்துக் காட்டும் முகமாகவே இந்த மரங்களை நாம் நடுகின்றோம்.

புதிய உலகிற்கு எங்களை கொண்டு செல்வதற்கு அடையாளமாக இந்த மரம் நாட்டும் விழா இடம்பெற்றது.

எங்களுடைய காணிகளில், தனிப்பட்டவர்களின் காணிகளில் நாங்கள் மரம் நடுவதை எந்த அரசாங்கங்களும் தடுத்து நிறுத்திவிட முடியாது. அந்த விதத்திலே நாங்கள் இன்று (நேற்று) இந்த அலுவலக வளாகத்தில் மரங்களை நாட்டியுள்ளோம்.

என்னுடைய வீட்டில் நான்கூட ஒருமரம் நாட்டியுள்ளேன். இது எங்களுடைய மனதைப் பொறுத்தது, உள்ளத்தைப் பொறுத்தது, உணர்ச்சிகளைப் பொறுத்தது. ஆகவே எங்களுடைய உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் முகமாக இதனைச் செய்ய எங்களுக்கு இடம்கொடுக்காவிட்டால் இதனுடைய தாக்கம் மிகவும் மோசமானதாக இருக்கும் என்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் மக்களுடைய உணர்ச்சிபூர்வமான சில விடயங்களை நாங்கள் இராணுவத்தின் ஊடாக, பலாத்காரத்தின் ஊடாக நிறுத்துகின்றோம் என்று அவர்கள் நினைத்தார்களேயானால் எந்த நாளுமே அது நிற்காது. பெருத்துக் கொண்டுதான் வரும்.

"தண்ணீரில் பந்தை போட்டுவிட்டு எவ்வளவுதான் நீங்கள் அமிழ்த்தினாலும் அந்தப் பந்து மேலேதான் வரும்"

அதேபோன்றுதான் எங்களுடைய உணர்ச்சிகளை இராணுவத்தின் மூலமாகவும் வன்முறைகள் மூலமாகவும் நிறுத்தப்பார்த்தால் அதனுடைய தாக்கம் மிகப் பெரியதாக வருங்காலத்தில் வரும் என்பதை அரசாங்கம் மனதில் எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மரம் நடுகை நிகழ்வில் வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன், கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஆனோல்ட், கஜதீபன், சிவயோகன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

(எ-6)

# யாழில் பெருமளவு இராணுவ...

பங்கேற்புடன் மாகாண சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மரக்கன்றுகள் நடுகை நிகழ்வு திட்டதிட்டபடி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதேவேளை இராணுவத்தினரின் கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் வட மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவில் நேற்றுமாலை 6.04 மணியளவில் சுடரேற்றி மாவீரர்களை நினைவு கூர்ந்துள்ளார்.

இதில் மாகாண சபை உறுப்பினருடன் மாவீரர் குடும்ப அங்கத்தவர் ஒருவர் உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை நேற்றிரவு யாழ்.பல்கலைக்கழகத்தினுள் விளக்கேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் யாழ்.பல்கலைக் கழக சூழலில் நேற்று இரவு படையினரும் பொலிஸாரும் குவிக்கப் பட்டிருந்தனர். (எ-6)

# மாவீரர் தினத்தை அனு...

செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

பயங்கரவாதிகளுக்கான ஒரு தினம் இலங்கையில் அனுஷ்டிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியான தினத்தை அனுஷ்டித்து முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த எமது இராணுவத்தினரை கொச்சைப்படுத்தக் கூடாது.

நாட்டிற்கு நன்மை செய்தவர்களுக்கு தினம் அனுஷ்டிப்பதை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் பிரபாகரன் மற்றும் ஏனைய பயங்கரவாதிகளுக்கு ஒரு தினத்தை அனுஷ்டிப்பது இலங்கையில் இன்னும் விடுதலைப் புலிகள் வாழ்கின்றனர் என்பதைப் புலப்படுத்தும்.

புலிகளுக்கு ஆதரவான நினைவஞ்சலிகளை பயங்கரவாதிகள் மட்டுமே அனுஷ்டிப்பர். நாட்டை நேசிக்கும் எவரும் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் தவறிழைக்கக் கூடாது. சர்வதேசத்தின் அச்சுறுத்தல் மற்றும் சலுகைகள் கிடைக்காமல் போகும் என்று அஞ்சி இந்த சிங்கள தேசத்தை இழந்துவிடக் கூடாது.

இந்த நாட்டில் சிங்கள இனத்தவரே பெரும்பான்மையாக வாழ்கினறனர். அவர்களின் நிலைப்பாடுகளை அரசாங்கம் புரிந்து கொள்ள வேணடும்.

வட மாகாண சபைத் தேர்தலை நடத்தியமையானது அரசாங்கம் செய்த மிகப் பெரிய தவறு. பிரிவினையை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை வடக்குத் தேர்தலின் மூலம் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலம்பெயர் தமிழர்களுடனும் சர்வதேச சக்திகளுடனும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர் என்றார். (எ-11)

# வடக்கில் பார்த்த காட்...

திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இலண்டனிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றிலேயே அவர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக கொழும்பு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில், மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் வேண்டும். உண்மையான கருத்து சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் நிலவ வேண்டும். தமிழர்-சிங்களவர் இடையே நல்லிணக்கம் வேண்டும்.

நான் இலங்கை சென்றதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், நான் சென்றதால் தான், அங்கு செய்ய வேண்டிய காரியங்களை வலியுறுத்த முடிந்தது என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# நெடுந்தீவு பிரதேச சபை...

டுதீவு வைத்திய சாலைக்கு கொண்டு சென்று பின்னர் நேற்று முன்தினம் இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் பிரேத பரிசோதனையை மேற்கொண்ட வைத்தியர் சிவரூபன் துப்பாக்கியால சுட்டே இவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதற்கு போதிய ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் இந்தக் கொலைக்கு 9 மில்லி மீற்றர் ரகைத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாகவும் அதன் சன்னம் அவரின் மூளையிலிருந்து மீட்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான நெடுந்தீவு பிரதேச சபை தலைவருக்கு 47 வயது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)


**வேலையாட்கள் தேவை**

கொத்து ரொட்டி, பிறைட் ரைஸ், டெவில் சிக்கன் வகையான உணவுகளைத் தயாரிப்பதில் முன் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்தவர் தேவை. அத்துடன் யாழ். உணவு வகைகளை சுவைபட தயாரிப்பதில் வல்லுநர்களும் மற்றும் உணவகத்தை துப்புரவு (Cleaning) செய்யக் கூடியவர்களும் உடன் தேவை.

**தொடர்பு : 0766038561**

Rajeethkumar (4596)

**வேலைவாய்ப்பு** (4604)

அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு.. 021 320 2787

**கோலாசிற்றி** தொழில்வங்கி இனி நாம் இருக்கிறோம்

224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரில் வரவும்

மாணவர்களுக்கான **O/L கருத்தரங்கு** (4602)

பாடம்:வரலாறு ஆசிரியர்:R.S.சந்திரன்

காலம்: 30.11.2013 (சனி), 01.12.2013 (ஞாயிறு)

நேரம்: 8.30 am - 2.00 pm

கட்டணம் 400/=

- வெளி மாணவர்களும் (ஆங்கில மொழிமூல மாணவர்களும்) பங்குபற்றலாம்.
- எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரி வினாத்தாள் வழங்கப்படும்.
- இலங்கை, உலக புறவுருவப் படம் குறித்தல்.
- பகுதி II இல், விளக்குக என வரும் வினாக்களிற்கு விடையளித்தல்.

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்

**ROYAL ACADEMY**

T.P.: 0776649134 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**


T.P : 021 321 0815, E-mail: valampurii@yahoo.com

**பதவி வெற்றிடம்**

கிளிநொச்சி நகரப் பகுதியில் இயங்கவுள்ள அச்சகத்துறைக்கு கணனி தமிழ் தட்டச்சு மற்றும் ஈமெயில், இணையம் ஆகியவற்றில் சிறப்பான தேர்ச்சியும் முன்னனுபவமுள்ளவர்களிடம் இருந்து (இருபாலாரும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமையுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தே.அ.அ.இல, கல்வித் தகைமை, தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை விளம்பர இல:- C-5575, மே/பா வலம்புரி இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக் கு எதிர்வரும் 30-ந் திகதிக்கு முன்னதாக தபாலில் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : கிளிநொச்சி நகரை அண்மித்து வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இ)



**ஆசிர்வதியுங்கள்**

**சிவபூமி பாடசாலை மாணவர்கள் சாதனை**

சி.தனுஷன்
இ.கிரோன் பிளைக்னோ
சி.துஷ்யந்தன்



ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவதற்கு கோண்டாவில் சிவபூமி ப்பாடசாலை மாணவர் சி.தனுஷன், இ.கிரோன் பிளைக்னோ, சி.துஷ்யந்தன்

ஆகிய மூவரும் அகில இலங்கை ரீதியில் வெற்றிபெற்று அவுஸ்திரேலியா பயணமானார்கள். எதிர்வரும் 29.11.2013 அன்று சிட்னி மாநகரில் நடைபெறும் போட்டியில் இவர்கள் வெற்றி வாகை சூடி நாடுதிரும்ப அனைவரும் ஆசிர்வதித்துப் பிரார்த்தியுங்கள்.

சிவபூமி பாடசாலை ஸ்தாபகர் ஆறு.திருமுருகன்
திருமதி கலைவாணி குகதாசன் (அதிபர்)
திருமதி S.பவளமணி (உபஅதிபர்), திரு.பிரான்சிஸ் போல் (இலங்கை விசேட ஒலிம்பிக் முகாமையாளர்)

(C-5587)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

ஆறு.திருமுருகன் – தலைவர்,
நிர்வாக சபையினர்
சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.